இலவச
Registered as a NewsPaper
விலை ரூபா : 10.00
# ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
பக்கங்கள்-12
நாதம் 16 | திருவள்ளுவர் ஆண்டு 2036 | கார்த்திகை-30 | 15-12-2005 | வியாழக் கிழமை | ஓசை-301

Fed Express
திருமுருகன் கொம் நெற்
259, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
Tel - 021 222 7835
(கி-13509)

# சிறிலங்காவுக்கு இந்தியா வழங்கும் ஆதரவு ஆக்கிரமிப்பிற்கு துணைபோகும் செயல்

## இந்தியப் பிரதமருக்கு யாழ். பல்கலை மாணவர் ஒன்றியம் மகஜர்

(யாழ்ப்பாணம்)

*பலாலி விமானப் படைத்தள புனரமைப்பிற்கு இந்திய அரசாங்கம் உதவிபுரிய முன் வந்துள்ளமை சிறிலங்கா அரசாங்கம் தமிழ் மக்கள் மீது புரிந்துவரும் ஆக்கிரமிப்பிற்குக் கொடுக் கும் நற்சான்றிதழாகவும், ஆக்கிரமிப்பிற்கு அனுசரணை புரிவதாகவும் உள்ளதால் விமான நிலையத்தை விஸ்தரிப்பதற்கு உதவுவதான இந்தியாவின் தீர்மானத்தை மீள்பரிசீலனை செய்யுமாறு யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் இந்தியப் பிரதமருக்கு வேண்டுகோள் விடுத் துள்ளது.*

இந்த விடயம் தொடர்பாக யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கிற்கு நேற்று அனுப்பியுள்ள மகஜரின் முழுமை வருமாறு:-

இலங்கையின் வடபகுதியில் அமைந்துள்ள தமிழர்களின் தாயக பூமியான யாழ்ப்பாணத்தில் சிறிலங்கா இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்டு இன்று இயங்கிக் கொண்டிருக்கின்ற பலாலி விமானப்படைத்தள விஸ்தரிப்பிற்கு தங்களது அரசாங்கம் உதவி புரிவதற்கு முன் வந்ததையிட்டு தமிழ் மக்களாகிய எமக்கு இது பெருவேதனையும் கவலையும் அளிக்கின்றது.

ஏனெனில் இவ் விமானப் படைத்தளம் அமைந்துள்ள பகுதி பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்களின் பூர்வீக வாழ்விடங்கள். இம் மக்கள் 30 வருடங்களுக்கும் மேலாக இடம் பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் வாழ்ந்து வருகின்றனர். அத்துடன் தமது சொந்த இடங்களுக்கு மீளவும் குடியேறலாம் என்ற கனவுடனும் அந்தக் கனவு நிறைவேறுவதற்காக

(12 ஆம் பக்கம் பார்க்க)

## நோர்வே-சிறிலங்கா வெளியுறவு அமைச்சர்கள் இன்று சந்திப்பு

(கொழும்பு)

சிறிலங்காவின் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர நோர்வே அரசாங்கத்தின் வெளிவிவகார அமைச்சர் ஜொனஸ் காஹரை ஹொங் கொங்கில் இன்று சந்திக்கவுள்ளதாக வெளிவிவகார அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## பயணத்தில் முடிவில்லை!

(கொழும்பு)

இலங்கை இனப்பிரச்சினை தொடர்பாக முன்னெடுப்புகளை மேற்கொள்வதற்காக வருகை தரவுள்ள நோர்வேஜிய உயர்மட்டக் குழுவின் பயணத்திகதி இன்னும் தீர்மானிக்கப்படவில்லை என நோர்வேயின் கொழும்பு தூதரகம் தெரிவித்துள்ளது.பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்காக நோர்வேஜிய உயர் மட்டக்குழு விரைவில் இலங்கை வரவுள்ளதாக அண்மையில் இலங்கைக்கு வந்திருந்த யப்பானிய விசேட

(12 ஆம் பக்கம் பார்க்க)

## அதிகாலையில் கச்சாய் பகுதி இராணுவத்தால் சுற்றி வளைப்பு!

தென்மராட்சிப்பிரதேசத்தின் கச்சாய்ப் பகுதி நேற்று அதிகாலை சிறிலங்காப்படையினரால் சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.அதிகாலை 4.00 மணிக்கு இப்பகுதியைச் சுற்றிவளைத்த படையினர் சுமார் காலை 8.00 மணிவரை தேடுதல்களை மேற்கொண்டனர். பெருமளவான சிறிலங்கா இராணுவத்தினருடன்,பொலிசாரும் இத்தேடுதல்களில் பங்கேற்றிருந்தனர். இதன்போது பொது மக்கள் கடுமையாக விசாரணைக்குட்படுத்தப்பட்டனர். (28)

## இரு தமிழ் இளைஞர் கைது!

(மன்னார்)

மன்னாரில் சிறிலங்கா இராணுவத்தினர் நேற்று நடத்திய தீவிர தேடுதல் நடவடிக்கையின்போது இரண்டு தமிழ் இளைஞர்களைக் கைது செய்தனர்.நேற்றுக்காலை மூன்று மணித்தியாலங்களுக்கு மேலாக சந்தைப் பகுதியில் தீவிர தேடுதல் நடவடிக்கையை சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்டனர்.

(12 ஆம் பக்கம் பார்க்க)


## இராணுவக்கெடுபிடிகள் நிறுத்தப்படாவிட்டால் படையினர் மீது கடும் தாக்குதல் நடத்தப்படும்!

### போ.நி.க.குழு ஊடாக பொங்கியெழும் மக்கள்படை எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் மக்கள் மீது சிறிலங்கா இராணுவத்தினர் நடத்தி வரும் தாக்குதல்கள், சுற்றிவளைப்புகள் நிறுத்தப்படாவிட்டால் சிறிலங்கா இராணுத்தினர் மீது கடும் தாக்குதல்களைத் தொடுப்போம் என்று போர் நிறுத்த கண்காணிப்புக் குழுவிற்கு பொங்கியெழும் மக்கள் படை எச்சரிக்கை அறிக்கையை அனுப்பியுள்ளது.கண்காணிப்புக் குழுவுக்கு நேற்றுப்புதன்கிழமை அனுப்பி வைக்கப்பட்டுள்ள அறிக்கையில் யாழ். குடாநாட்டில் அண்மைக்காலமாக எமது மக்கள் மீது இராணுவ அராஜகங்கள் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளன..அண்மைக் காலமாக யாழ். குடாநாட்டில் எமது தேச விடுதலைக்கும் தமிழ்தேசியத்திற்கும் ஆதரவாகக் குரல்கொடுத்த கல்வியாளர்களையும், எமது ஆதரவாளர்களையும் சிறிலங்கா இராணுவமும் அதனோடு இணைந்த ஈ.பி.டி.பி யும் படுகொலை செய்துள்ளது. அதற்குப் பதிலடியாக நாமும் சிறிலங்கா இராணுவத்தின் மீது தாக்குதலைத் தொடுத்தோம். எனினும்

(12 ஆம் பக்கம் பார்க்க)



யாழ்இல் பரவலாகக்காணப்படும் சுவரொட்டி

## மக்களின் இயல்பு வாழ்வைப் பாதிக்கும் இராணுவக்கெடுபிடிகளை நிறுத்துக

### - கண்காணிப்புக் குழுவிடம் புலிகள் வலியுறுத்து

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும், இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினருக்குமிடையிலான சந்திப்பு நேற்று நடைபெற்றுள்ளது.

மன்னார் சாளம்பைக் குளத்தில் உள்ள மாவட்டத் திட்டமிடலுக்கும் மேம்பாட்டிற்குமான செயலகத்தில் நேற்றுப் பிற்பகல் இரண்டு மணியளவில் இந்தச்சந்திப்பு நடைபெற்றது.

இந்தச்சந்திப்பில் இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் சார்பில் தலைவர் ஹக்ரப் ஹொக்லண்ட், மன்னார் மாவட்ட கண்காணிப்புக் குழுத் தலைவர் ஜோக்கின் றொபேட்சன், உதவித்தலைவர்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளைச் சந்திக்க தொண்டமான் விருப்பம்

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் ஆறுமுகம் தொண்டமான் இவ்வாரம் தமிழீழ அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்களைச் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. தமிழ்ச்செல்வன் அவர்களைச் சந்தித்து பேசுவதற்கான விருப்பத்தினை ஆறுமுகம் தொண்டமான் விடுதலைப்புலிகளின் அரசியல் துறையினரிடம் தெரிவித்துள்ளதாகவும், இதற்கான நேரம் வழங்கப்பட்டதும் இச்சந்திப்பு நடைபெறும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை மலையக தொழிற்சங்கங்களை பலமிழக்கச் செய்வதற்கு அரசாங்கம் முயன்று வருவதனால்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## அம்பாறையில் விமானப்படையின் உலங்குவானூர்தி மீது தாக்குதல்!

(கொழும்பு)

சிறிலங்கா வான்படைக்கு சொந்தமான உலங்கு வானூர்தி மீது அம்பாறை அருகம்பே பிரதேசத்தில் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. எம்ஐ 17 ரக உலங்கு வானூர்தி மீது நேற்றுப்பிற்பகல் 3.15மணிக்கு இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது.

சுமார் 13 தடவைகள் உலங்கு வானூர்தி மீது தாக்குதல் நடத்தப்பட்ட போதும் ஆறு சூடுகள் உலங்கு வானூர்தியை தாக்கியுள்ளன. எனினும் இதில் எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை. சிறு ஆயுதம் மூலமே தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாகப் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

குறித்த உலங்கு வானூர்தி இத்தாலி அரசாங்கத்தின் பிரதிநிதி ஒருவரை ஏற்றிவருவதற்காக அருகம்பேக்கு சென்றிருந்தது. திருமதி மாகரியா பொனிவார் என்ற இந்தப் பிரதிநிதி இத்தாலிய வெளிவிவகார அமைச்சின் இரண்டாவது நிலை அதிகாரியாவார்.

அவருடன் நேற்று அருகம்பே பிரதேசத்தில் பயணம் ஒன்றை மேற்கொண்டிருந்த 22 பேர்வரை கொழும்புக்கு திரும்பும் வகையில் உலங்கு வானூர்தியை தரையிறக்க

(12 ஆம் பக்கம் பார்க்க)

## சந்திரிகாவின் விருப்புக்கு மாறாக டலஸ்அழகப் பெரும நியமனம்

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் வெற்றிடமாக இருந்த தேசிய பட்டியல் பாராளுமன்ற நிலைக்கு டலஸ் அழகப்பெரும நியமிக்கப்பட்டுள்ளார்.

கூட்டமைப்பின் செயலாளர் சுசில் பிரேமஜயந்த இது தொடர்பாக தேர்தல் ஆணையாளருக்கு அறிவித்துள்ளார்.

சிறிலங்காவின் முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரின் கொலையை அடுத்தே பாராளுமன்றத்தில் இந்தப் பதவி வெற்றிடம் ஏற்பட்டது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

# வரிவிளம்பரம்

### புதிய பிரிவுகள் ஆரம்பம்

இணையத்தளங்களை
உருவாக்கக் கூடிய உயர்கற்கை
நெறி
**Dreamweaver MX**
வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன.
தொடர்புகட்கு:
வின்நெற் கணனி பயிற்சி நிலையம்
டிப்போவீதி, கிளிநொச்சி
(சி.13074)

### ஜோண் கல்வி நிலைய புதிய வகுப்புக்கள் ஆரம்பம்

2006ஆம் ஆண்டிற்கான தரம்3 தொடக்கம் தரம் 11 வரையான புதிய வகுப்புகள் ஆரம்பமாகின்றன. காலம்:- 20.12.2005 செவ்வாய்க்கிழமை பி.ப 3மணி நிர்வாகி புதுக்குடியிருப்பு. (6956)

### சீமெந்துக்கல் விற்பனைக்குண்டு

இயந்திரத்தில் செய்த சீமெந்துக் கல் சிவா பொறியியற் தொழிலகம் 4ஆம் கட்டை அம்பாள் புரம் வன்னி விளாங்குளத்தில் (மாங்குளம்) விற்பனைக்குண்டு.அளவுகளும் விலையும்5''x6'' x12''=ரூ25.00, 4''x6'' x14''=ரூ23.00 (6841)

### நியூட்டன் அக்கடமி வட்டக்கச்சி

புதியகல்வி ஆண்டுக்கான தரம் 6முதல் O/L வரையான வகுப்புகள் 15.12.2005 வியாழக்கிழமை பி.ப 3.00 மணிக்கு ஆரம்பம். இவ் ஆண்டு புதிய ஆசிரியர் அணியுடன் புதிய நிர்வாகத்தின் கீழ் வகுப்புகள் ஆரம்பம். நிர்வாகி. (7095)

### தவறிவிட்டது

கே.கனகசுந்தரம் பிரதீபராணி என்பவரது அடையாளஅட்டை (846561633V) புளியங்குளத்துக்கும் நெடுங்கேணிக்கும் இடையில் தவறவிடப்பட்டுள்ளது. இதைக் கண்டெடுத்தவர்கள் சபேஸ் வீடியோ புதுக்குடியிருப்பில் அல்லது ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்கவும். (6961)

### தவறிவிட்டது

சதாசிவம்-இந்திரன் ஆகிய எனது அடையாள அட்டை பரந்தன் - முல்லை வீதியில் (தே.அ.அ.இல 633513260V) தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் உடையார்கட்டு தேவமதி வாணிப நிலையத்தில் ஒப்படைத்து உதவவும். (6442)

## நடமாடும் சேவைமூலம் தமிழீழ ஊர்திப்பதிவுகள்

(அலுவலக செய்தியாளர்)

தமிழீழ மோட்டார் ஊர்திப்பதிவுப்பகுதியினரால் நடமாடும் சேவைமூலம் இதுவரை தமிழீழப்பதிவுகள் மேற்கொள்ளப்படாத ஊர்திகளுக்கான பதிவுகளும் 2006 ஆம் ஆண்டிற்கான வரி அட்டையும் வழங்குவதற்கான நடவடிக்கைகள் அந்தந்த போக்குவரத்து கண்காணிப்புப்பிரிவு பிரதேச செயலகத்தில் வைத்து மேற்கொள்ளப்பெற்று வருகின்றன.

இன்று முழங்காவில் பிரதேசத்திலும், நாளை இலுப்பைக்கடவை பிரதேசத்திலும் 18ஆம் திகதியன்று கனகராயன்குளம் பிரதேசத்திலும்,19ஆம் திகதியன்று புளியங்குளம் பிரதேசத்திலும் 20ஆம்திகதியன்று விடத்தல்தீவு பிரதேசத்திலும்மேற்படி நடவடிக்கைகள் இடம்பெறும் என்று தமிழீழபோக்கு வரத்து கண்காணிப்புப்பிரிவின் மோட்டார் ஊர்திப் பதிவுப் பகுதியினர் தெரிவித்துள்ளனர். (சோ)

# தமிழீழ சுகாதார சேவையினரின் தீவிர நடவடிக்கை

# சுகாதாரம் பேணாத வியாபார நிலையங்கள் தடுக்கப்பட்டன

(அலுவலகசெய்தியாளர்)

தமிழீழ சுகாதார சேவைகளின் ஒழுங்குபடுத்தலில் சுகாதார சேவையின் விசேட சுகாதார நடவடிக்கைப் பிரிவும், தொற்று நோய் தடுப்புப் பிரிவும் இணைந்து கிளிநொச்சி, பரந்தன் பகுதிகளிலுள்ள வியாபார நிலையங்கள், மற்றும் உணவகங்களில் சுற்றாடல் சுகாதார ஆய்வுகளையும், உணவுச் சுகாதார ஆய்வுகளையும் மேற்கொண்டு வருவதுடன் நோய்க் காவி பெருக்க இடங்கள் அவதானிக்கப்பட்டு உடனடியாக அழிக்கும் நடவடிக்கையினையும் மேற்கொண்டு வருகின்றனர்.

நேற்றைய தினம் கிளிநொச்சி, கரடிப்போக்குப் பகுதிகளில் உள்ள வியாபார நிலையங்கள் மற்றும் உணவகங்களில் மேற்படி பிரிவினரால் நடவடிக்கை மேற்கொள்ளப்பெற்றதுடன் சுகாதாரத்தைப் பேணும் நடவடிக்கைகளை கைக்கொள்ளத் தவறிய இரண்டு உணவகங்களும், ஒரு சுத்திகரிப்பு நிலையமும் இயங்காது தடுக்கப்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

சுகாதார சேவைகளின் விசேட நடவடிக்கைப் பிரிவுப் பொறுப்பாளர் சிறீ.ஈழச்செல்வன் தலைமையில் இந் நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பெற்று வருவதுடன் தொடர்ந்தும் சகல பகுதிகளிலும் இந் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமெனவும் அவர் தெரிவித்துள்ளார். (சோ)

## வீதியைத் திருத்த கோரிக்கை

மன்னார் எழுத்தூர்தாழ்வாடுப் பகுதியில் அண்மை நாட்களாகப் பெய்த தொடர் மழையினால் அப்பகுதியிலுள்ள வீதிகள் யாவும் போக்குவரத்துச் செய்ய முடியாத நிலையிலுள்ளது. வீதிகள் எங்கும் குன்றும் குழியுமாக இருப்பதாலே வாகனங்கள் செல்லமுடியாதுள்ளதுடன் பாதசாரிகளும் பெரும் சிரமத்தை எதிர்நோக்குகின்றனர்.

இதனைக் கருத்திற்கொண்டு மக்கள் இவ்வீதியினை உடனடியாக திருத்தியமைக்குமாறு வீதி அபிவிருத்தி நிறுவனத்திற்கு முறையிட்டுள்ளனர்.

## தொடர்பு கொள்க

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி கணினியியல் கல்லூரியில் கணினி கற்கை நெறியினை நிறைவுசெய்து வெளியேறிய மாணவர்கள் அனைவரையும் நாளை 16ஆம் திகதிக்கு முன்பதாக கல்லூரி நிர்வாகத்துடன் தொடர்பு கொள்ளும் வண்ணம் கிளிநொச்சி கணினியியல் கல்லூரி இயக்குனர் வேண்டியுள்ளார். (சோ)

## வாழ்த்துகின்றோம்

14.12.2005 அன்று இல்லற வாழ்வில் இணைந்திருக்கும்

*திரு.திருமதி* **ரவிராஜ் செல்வரஜனி**

தம்பதியினரை சீரும் சிறப்புடனும் பல்லாண்டு காலம் வாழ்கவென மனமார வாழ்த்துகின்றோம்.

*அன்புடன் வாழ்த்தும்*
*கிளிநொச்சி நண்பர்கள்.*

(7098)

## வைர விழாக்காணும் முல்லைப்பங்குத்தந்தை ஜேம்ஸ்பத்திநாதர் அடிகளாரை



## வாழ்த்துகின்றோம்

*முல்லைப் பங்குத்தந்தை ஜேம்ஸ்பத்திநாதர் அடிகளாரின் 60 ஆவது அகவையில் காலடி எடுத்து வைக்கும் அவரை முல்லை மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்க சமாசம் பெருமையுடன் வாழ்த்துகின்றது.*


*சுனாமி கடல் அனர்த்தத்திற்கு 5மாதங்களுக்க முன்னரே தீர்க்க தரிசனத்துடன் எமது பகுதியில் பாரிய அனர்த்தம் உள்ளதெனவும் முக்கியமான உடைமைகளைப் பாதுகாத்து வைக்குமாறும் ஞாயிறு பூசைகளில் தினமும் தெரிவித்துள்ளார். அத்துடன் சுனாமி அனர்த்தம் நடைபெற்ற அன்றைய தினம் கடற்கரைக்கு அண்மையிலுள்ள புனித இராயப்பர் ஆலயத்தில் வைக்கவேண்டிய திருப்பலிப் பூசையினை மாங்குளம் வீதியில் எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு முன்னால் உள்ள புனித சூசையப்பர் சிற்றாலயத்தில் திருப்பலிப்பூசையை நிறைவேற்றி 1000இற்கு மேற்பட்ட மக்களின் உயிர்களையும் காப்பற்றியுள்ளார். அத்துடன் சுனாமி கடல் அனர்த்தத்திற்குப் பின்னர் பாதிக்கப்பட்ட மக்களை அரவணைத்துக் குடியமர்த்துவதிலிருந்து அவர்களுடைய வாழ்வாதாரங்களைக் கட்டியெழுப்புவதுவரை மதவேறுபாடுகளின்றி உடல் உள உழைப்பை இம்மக்களுக்காக அர்ப்பணித்து வைரவிழாக் காணும் எமது முல்லைப்பங்குத் தந்தை அவர்களை பல்லாண்டு காலம் வாழவேண்டும் என கடவுளை வேண்டி வாழ்த்துகின்றோம்.*

***வாழ்த்துவோர்:-***

**முல்லை மாவட்ட கடற்றொழிலாளர்**
**கூட்டுறவுச்சங்க சமாசமும், அதன்**
**உறுப்புரிமை**
**சங்கங்களும்.**

(சி-13498)

## துயர் பகிர்கின்றோம்



**அமரர்**
**ஆறுமுகம் கந்தசாமி**
**செல்வபுரம் முல்லைத்தீவு**
**மலர்வு:- 18.04.1953**
**உதிர்வு:- 14.12.2005**

எமது முல்லைத்தீவு இளவேனில் வாணிபத்தின் பணியாளர் திரு. க. சிவகங்கா (மயூரன்) அவர்களின் தந்தையாரான அமரர் ஆறுமுகம் கந்தசாமி என்பவர் இயற்கையெய்திய செய்தி கேட்டு அதிர்ச்சியும், ஆழ்ந்த கவலையும் அடைந்துள்ளோம். இவ்வேளை அன்னாரது குடும்பத்தாரின் துயரிலும் பங்கு கொள்வதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**பணிப்பாளர்,**
**பொறுப்பாளர்கள்,**
**பணியாளர்கள்,**
**இளவேனில் வாணிபம்.**

(7099)

## துயர் பகிர்கின்றோம்

**தமிழரசு தங்கமாட பணியாளரான இ.நகுலேஸ்வரியின் அன்புத்தந்தையார்**

**அமரர்**
**வல்லிபுரம் இளையதம்பி**

**அவர்கள் 13.12.2005 அன்று இறைவனடி சேர்ந்துள்ளார். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அவர் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.**

துயரில் பங்கு பற்றும் நகைவாணிப

**பணிப்பாளர், பொறுப்பாளர்கள்,**
**பணியாளர்கள்,**
**உற்பத்தியாளர்கள்.**

(7097)

## அமெரிக்கப் படைகளின் ஆக்கிரமிப்பின் பின்

# இன்று ஈராக்கில் பாராளுமன்றத்தேர்தல்; அல்ஹைய்தா எதிர்க்கிறது; சுனி முஸ்லிம் ஆதரிக்கிறது

(பாக்தாத்)

**ஈராக் – அமெரிக்கக் கூட்டுப்படைகளின் கைகளில் வந்தபின் இன்று முதல் முதலாக அங்கு பாராளுமன்றத் தேர்தல் நடைபெறவுள்ளதாக அறிய வருகின்றது. பெருமளவு வன்முறைகள் இடம்பெறாதபோதிலும் சிறு சிறு தாக்குதல் சம்பவங்களுக்கு மத்தியில் இடம்பெறவிருக்கும் இத்தேர்தலை அல்–ஹைய்தா இயக்கம் எதிர்க்கும் அதேவேளை சுனி முஸ்லிம் பிரிவினர் ஆதரிக்கின்றனர்.**

ஈராக்கில் இன்று பாராளுமன்றத்தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் அங்காங்கே சிறு சிறு தாக்குதல் சம்பவங்கள் நடைபெற்று வருகின்றன.

இம்முறை நடைபெறும் தேர்தலில் 17 மில்லியன் ஈராக்கிய மக்கள் வாக்காளர்களாகப் பதிவு செய்துள்ளனர். 2003ஆம் ஆண்டு ஈராக் மீதான அமெரிக்கக் கூட்டுப்படைகளின் ஊடுருவலின் பின்னர் அந்த நாட்டின் சனநாயகக் கட்டமைப்புக்களை ஏற்படுத்துவது தொடர்பாக அமெரிக்கா வழங்கியிருந்த கால அட்டவணை உத்தியோகபூர்வமாக நிறைவடையும் நிலையில் இந்தத் தேர்தல் நடைபெறவிருக்கின்றது.

மூன்று வருட கால அமெரிக்க ஆக்கிரமிப்பின் பின்னர் தெரிவு செய்யப்படவிருக்கும் 275 ஆசனங்களைக் கொண்ட புதிய பாராளுமன்றம் பூரண அதிகாரங்களைக் கொண்டிருக்கும்.

இந்தத் தேர்தல் காரணமாக ஈராக்கிய எல்லைகள் மூடப்பட்டுள்ளன. வாகனப் போக்குவரத்துகளுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. கடைகள், வர்த்தக நிறுவனங்கள் மூடப்பட்டுள்ளன. பெரும்பாலான வாக்காளர்கள் தமது வீடுகளில் தங்கியுள்ளனர். இந்த நிலையில் வன்செயல்கள் முன்னரைவிடக் குறைவடைந்துள்ளது எனத் தெரிய வருகின்றது.

எனினும் ஈராக்கின் வட பகுதியிலேயே வன்செயல்கள் இடம்பெற்றுள்ளது. பாக்தாத்துக்கு அருகில் நேற்று முன்தினம் குண்டுவெடித்தது. இதன்போது நான்கு அமெரிக்கப்படையினர் உயிரிழந்தனர். அத்துடன் முன்னணி சுனி முஸ்லிம் வேட்பாளர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டார்.

வாக்கெடுப்புக்களைத் தாம் குழப்பப்போவதாக அல்ஹைய்தா அச்சுறுத்தல் விடுத்துள்ளது. ஆனாலும், சுனி முஸ்லிம் கிளர்ச்சியாளர்கள் வேட்பாளர்களுக்கு ஆதரவாகச் செயற்படுகிறார்கள். வாக்குச்சாவடிகளை தாம் பாதுகாக்கப்போவதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

நான்கு ஆண்டுகளுக்கு இருக்கப்போகும் இந்த அரசில் தமக்கும் செல்வாக்கு இருக்க வேண்டும் என்பதே இவர்களின் நோக்கமாகும்.

## புதிய சப்பாத்து கேட்கிறார் சதாம் ஈராக்கை ஆண்டவருக்கு இந்த நிலை



(பாக்தாத்)

ஈராக் மீது அமெரிக்கா படையெடுத்து சதாம் ஹுசைன் ஆட்சியை அகற்றி பாதாள அறையில் பதுங்கி இருந்த அதிபர் சதாம் ஹுசைனையும் அமெரிக்கப் படை கைது செய்தது.

அவர் இன்னும் ரகசிய இடத்திலேயே சிறை வைக்கப்பட்டுள்ளார். அவர் மீது 100இற்கும் மேற்பட்ட சியா முஸ்லிம்களையும், குர்து இன மக்களையும் கொன்று குவித்த வழக்கு தொடரப்பட்டுள்ளது. அந்த வழக்கு விசாரணை பாக்தாத் நீதிமன்றில் நடைபெற்று வருகிறது.

சிறையில இருக்கும் சதாம் ஹுசைனை அவரது சட்டத்தரணி சந்தித்தபோது தனக்கு புதிய சப்பாத்து வேண்டும் என்று அவரிடமும் சிறை அதிகாரிகளிடமும் சதாம் ஹுசைன் கோரிக்கை விடுத்தார்.

இது பற்றி சதாம் ஹுசைன் கூறும்போது இரண்டு ஆண்டுகளாக ஒரே சப்பாத்தைத்தான் அணிகிறேன். தேய்ந்து பழசாகி விட்டதால் அதற்குப் பதில் புதிய சப்பாத்து வேண்டும். என் துணிகளும் அழுக்காகி விட்டன. துணி துவைக்க வசதி செய்து கொடுக்கவில்லை.

பொழுதுபோக கதைப் புத்தகங்கள் வேண்டும் என்று அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்த நிலையில் ஈராக் பாராளுமன்றத்துக்கு பலத்த பாதுகாப்புடன் இன்று தேர்தல் நடக்கிறது.

275 உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க ஒரு கோடியே 55 இலட்சம் பேர் வாக்களிக்கிறார்கள்.

பொதுமக்கள் இன்று வாக்களித்தாலும் பொலிசார், இராணுவத்தினர், அரச அதிகாரிகள், சிறைக் கைதிகள் ஆகியோர் நேற்று முன்தினமே வாக்குப்போட அனுமதிக்கப்பட்டனர். ஆனால் சிறையில் இருக்கும் சதாம் ஹுசைன் வாக்குப் போடவில்லை.

## இப்படியும் ஒரு போராட்டம்



வளர்ச்சியடைந்த நாடுகளின் விவசாயக் கொள்கைகளைக் கண்டித்து ஹொங்கொங்கில் நேற்று முன்தினம் ஆயிரக்கணக்கான விவசாயிகள் போராட்டம் நடத்தினர். அதில் தங்கள் வாழ்வில் பணக்கார நாடுகள் விளையாடுவதைக் குறிக்கும் வகையில் அமெரிக்க அதிபர் புஷ், இங்கிலாந்து பிரதமர் டொனிபிளேயர், பிரான்ஸ் அதிபர் ஜாக்ஸ்சிராக், ஜப்பான் பிரதமர் ஜுனிசிரோ கொய்சுமி ஆகியோர் பஞ்சுகளை வைத்து விளையாடுவது போல் பொம்மைகளை விவசாயிகள் வைத்திருந்தனர்.

## எண்ணெய்க்கிடங்கு தீ அணைக்கப்பட்டது லண்டன் அதிகாரிகள் தகவல்

(லண்டன்)

இங்கிலாந்தில் எண்ணெய் சேமிப்புக் கிடங்குகளில் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஏற்பட்ட தீயானது கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் தீயணைக்கும் படையினர் பல சிரமத்தின் மத்தியில் தீயைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்துள்ளனர்.

தீயணைப்புப்படையினர் தீயை அணைப்பதற்கு இரவு பகலாக பணியில் ஈடுபட்டதாக அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

இங்கிலாந்தின் கோட் போர்ட் எரிபொருள் நிலையத்திலுள்ள எண்ணெய்த் தாங்கியில் ஒன்று வெடித்ததன் காரணமாக அங்கு தீவிபத்து ஏற்பட்டதாக தீயணைப்புப் படையின் உயர் அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

தீச்சுவாலையின் காரணமாக ஏற்பட்ட கரும்புகையினால் அங்குள்ள சுற்றுச்சூழல் பாதிப்படைந்துள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். சுமார் 180 தீயணைப்புப் படையினர் 15 மில்லியன் லீற்றர் தண்ணீரைப் பிரயோகித்து தீயைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்துள்ளனர்.

தீவிபத்துக் காரணமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட 43 பேரில் இரண்டு பேரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

## அமெரிக்காவில் எண்ணெய்க்குழாய் வெடித்தது ஐந்து பேர் பலி; 58 பேர் காயம்

(வோஷிங்டன்)

நேற்று அமெரிக்காவில் நியூ ஜெர்சி பகுதியில் உள்ள எண்ணெய்க்குழாய் திடீரென்று வெடித்தது. அந்தப் பகுதியிலுள்ள எரிவாயுக்குழாயும் வெடித்தது. அதில் அங்குள்ள அடுக்குமாடி குடியிருப்பு தீப்பிடித்து எரிந்தது.

இதில் ஐந்து பேர் உடல் கருகிப் பலியாகிவிட்டனர். 58 பேர் காயமடைந்தனர்.

இது தீவிரவாதிகளின் நாசவேலையா என்பது குறித்து விசாரணை நடைபெற்று வருகிறது. கட்டடம் தீப்பிடித்து எரிந்த போது அதில் இருந்தவர்கள் நியூயோர்க் உலக வர்த்தக மையக் கட்டடத்தை முன்பு தீவிர வாதிகள் தகர்த்தது போல மீண்டும் தாக்குதல் நடத்தி இருப்பார்களோ என்ற பீதியில் அலறி அடித்தபடியே அங்குமிங்கும் ஓடினார்கள்.

இந்தச் சம்பவம் தொடர்பில் இதுவரை மேலதிக தகவல்கள் எதுவும் வெளியாகாத நிலையில் அமெரிக்க அரசும் இச்செய்தி தொடர்பில் அறிவித்தல் எதையும் வெளியிடவில்லை.

## 1,500 கிறிஸ்மஸ் தாத்தாக்கள் கலந்து கொண்ட பேரணி


(லண்டன்)

இங்கிலாந்து நாட்டில் எடின்பரோ நகரில் கிறிஸ்மஸ் விழாவையொட்டி, கிறிஸ்மஸ் தாத்தாக்களின் ஓட்டம் நடந்தது. இதில் ஆயிரத்து 500இற்கும் மேற்பட்ட கிறிஸ்மஸ் தாத்தாக்கள் கலந்து கொண்டனர்.

சிறுவர்களின் நலனுக்கான அறக்கட்டளைக்கு நிதி திரட்டுவதற்காக இந்த ஓட்டம் நடந்தது.

கடந்த ஆண்டு நடந்த ஓட்டத்தில் 400 கிறிஸ்மஸ் தாத்தாக்கள் கலந்து கொண்டனர். அடுத்த ஆண்டு இதைவிட மூன்று மடங்கு அதிகமானவர்கள் கலந்து கொள்வார்கள் என்று இதன் அமைப்பாளர் மார்கரெட்ரோவ்ராத் கூறினார்.

## பார்வையாளர்கள் பரவசம்




கோலாலம்பூரில் நடைபெற்ற ஆசியன் மாநாட்டு வர்த்தகக் கண்காட்சியைப் பார்வையிட்டு பரவசமடையும் பன்நாட்டுப் பார்வையாளர்கள்.

## பாகிஸ்தானில் பூகம்ப இடிபாடுகளுக்குள்ளிருந்து ஒரு பெண் இரு மாதங்களுக்குப் பின் உயிருடன் மீட்பு

(இஸ்லாமபாத்)

பூமி அதிர்ச்சி இடிபாடுகளில் இருந்து இரண்டு மாதங்களுக்குப் பின் ஒரு பெண் உயிருடன் மீட்கப்பட்டார். இந்த அதிசய சம்பவம் பாகிஸ்தானில் நடந்துள்ளது.

பாகிஸ்தான் வசம் இருக்கும் காஷ்மீரின் தலைநகரான முசபராபாத்தில் கடந்த ஒக்ரோபர் மாதம் எட்டாம் திகதி பயங்கர பூமி அதிர்ச்சி ஏற்பட்டது. இதில் ஏராளமானோர் இறந்தமை தெரிந்ததே.

இன்னமும் அந்த இடத்தில் மீட்புப்பணி நடந்து வருகின்றது. கடந்த திங்கட்கிழமை முசபராபாத் அருகே உள்ள கம்சார் என்ற இடத்தில் வீடுகளின் இடிபாடுகளை அகற்றிக்கொண்டு இருந்தபோது முனங்கல் சத்தம் கேட்டது.


உடனே அந்த இடத்தை வேகமாக அப்புறப்படுத்தியபோது 40 வயது மதிக்கத்தக்க ஒரு பெண் உயிருக்குப் போராடியபடி கிடந்தமை கண்டுபிடிக்கப்பட்டது. அந்தப் பெண்ணை மீட்புக் குழுவினர் உடனடியாக முசபராபாத்தில் உள்ள மருத்துவமனைக்கு எடுத்துச் சென்றனர்.

அங்கு அந்தப் பெண்ணுக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. அவருக்கு திரவ உணவு கொடுக்கப்பட்டது.

இது பற்றி மருத்துவர் கூறுகையில், இந்தப் பெண் உயிர் பிழைத்துக்கொள்ள அதிக வாய்ப்பு இருக்கிறது என்று தெரிவித்தார்.

பூகம்பம் ஏற்பட்ட இடத்திலிருந்து 64 நாட்களுக்கு பின் ஒரு பெண் உயிருடன் மீட்கப்பட்டது மிக அதிசயமான சம்பவம் என்று மீட்புக் குழுவைச் சேர்ந்த ஒரு அதிகாரி கூறினார்.

## நெரிசலில் நகரம்



டுபாயில் முக்கிய வர்த்தகப் பகுதியான சயீத் சாலையில் வாகன நெரிசல் அதிகரித்து வருகின்றது. உலங்கு வானூர்தியில் இருந்து எடுக்கப்பட்ட படத்தில் நெரிசலில் சிக்கிய வாகனங்கள் சாலையில் அணிவகுத்து நிற்கும் காட்சி.

# மீராவோடை படைமுகாமருகே எறிகணைகள் வீழ்ந்து வெடிப்பு

## -மூன்று படையினர் காயம்

(மட்டக்களப்பு)

வாழைச்சேனை மீராவோடை வீதியில் சிறிலங்கா இராணுவ முகாம் அருகே நேற்று முன்தினம் எறிகணைகள் வீழ்ந்து வெடித்து ள்ள தாகவும் இதில் மூன்று சிறிலங்காப் படையினர் காயமடைந்துள்ளனர் எனவும் படைத்தரப்புத் தெரிவித்துள்ளது.

இதைத் தொடர்ந்து அச்சத்தின் காரணமாக அப்பகுதியிலிருந்து தமிழ் மக்கள் அருகில் உள்ள கறுவாக்கேணி, கொண்டையன்கேணி கிராமங்களுக்கு இடம்பெயர்ந்துள்ளனர்.

இத் தாக்குதலை அடுத்து சிறிலங்காப் படையினர் அவ்வூர் தமிழ் இளைஞர்கள் மீது தாக்குதல் நடத்தியதாகவும் அறியமுடிகின்றது.

இதேவேளை அம்பாறை மாவட்டம் ஆலையடி வேம்பில் சிறிலங்கா அதிரடிப்படையினர் சுற்றி வளைப்புத் தேடுதல்களை நடத்தியுள்ளனர்.

# புளொட்குழு உறுப்பினர் கடத்தலில் புலிகளுக்கு தொடர்பில்லை

## -போ.நி.க.குழுவிடம் ஞானம் தெரிவிப்பு

போர் நிறுத்தக்கண்காணிப்புக் குழுவினருக்கும் தமிழீழ விடுதலைப்புலிகளின் வவுனியா மாவட்ட அரசியல்துறையினருக்கும் இடையில் கடந்த திங்கள்,செவ்வாய் ஆகிய தினங்களில் சந்திப்புகள் இடம்பெற்றுள்ளன.

புளியங்குளத்தில் நடைபெற்ற இந்தச் சந்திப்புக்களின் போது கடந்த திங்கள் வவுனியாவில் கடத்திச்செல்லப்பட்ட புளொட் குழு உறுப்பினர் தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளது.

இதன்போது கருத்துரைத்த தமிழீழ விடுதலைப்புலிகளின் வவுனியா அரசியல்துறை பொறுப்பாளர் ஞானம் தமது அமைப்புக்கும் கடத்தலுக்கும் எவ்வித தொடர்புகளும் இல்லை எனத் தெரிவித்துள்ளார்.

இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளமையால் கடத்தப்பட்டவரைக் கண்டுபிடிக்கும் தார்மீகப்பொறுப்பு சிறிலங்காப் பொலிசாரைச் சார்ந்ததாகும் எனக்குறிப்பிட்டார். இந்த நிலையில் கடத்தலுடன் தொடர்புடையவர்கள் எமது கட்டுப்பாட்டுப் பகுதியில் இருந்தால் அவர்களைக்கைது செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் உறுதியளித்துள்ளார். கடத்தல் சம்பவம் தொடர்பில் சாஸ்திரிகூளாங்குளத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளவர்கள் மூவரும் தமது அமைப்புடன் தொடர்பற்றவர்கள் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.(21,32)

# சுயநிர்ணய உரிமையை வலியுறுத்தி மன்னாரில் மக்கள் ஆர்ப்பாட்டம்


[மன்னார்]

**எமது சுயநிர்ணய உரிமையுடன் சுதந்திரமாக வாழ விடக்கோரி மன்னார் பெரிய மடுப்பிரதேச மக்கள் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தியுள்ளனர். இதில் சிறீலங்கா அரசுக்கும் சர்வதேச நாடுகளுக்குமான கண்டன அறிக்கைகளும் வாசிக்கப்பட்டன.**

பெரியமடு மன்னார் ஈச்சமடு மக்கள் கடந்த திங்கட்கிழமை மாலை இந்தப் போராட்டத்தை நடத்தியுள்ளனர்.

விடாது பெய்துகொண்டிருந்த மழையின் மத்தியிலும் பெருமளவான மக்கள் தங்கள் உரிமையை அங்கீகரிக்கக் கோரி கோசங்களை எழுப்பினர். சிறிலங்கா அரசும் சர்வதேச சமூகமும் தமது கோரிக்கைகளை ஏற்றுக்கொள்ள வேண்டும் எனவும் தவறினால் மக்கள் போராட்டத்தில் ஈடுபடுவோம் எனவும் அவர்கள் குரல் எழுப்பினர்.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் சிறிலங்கா பேரினவாதத்தின் கொடும்பாவியை தீயிட்டுக் கொழுத்தினர். போராட்டத்தில் சிறிலங்கா அரசுக்கும் சர்வதேச மூகத்திற்குமான கண்டன அறிக்கைகள் கையளிக்கப்பட்டன.



கிளிநொச்சி - கனகபுரம் முதலாம் பண்ணைக்கான வீதியானது மக்கள் போக்குவரத்து மேற்கொள்ள முடியாத நிலையில் சீர்கெட்டுள்ளதனைப் படத்தில் காணலாம். (படம் : சோதி)

# மன்னார் மாவட்ட அபிவிருத்தி தொடர்பாக கலந்துரையாடல்

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தின் திட்டமிடல் அபிவிருத்தி தொடர்பான கருத்தரங்கு நேற்றுமுன்தினம் மன்னார் மாவட்ட திட்டமிடல் செயலகத்தில் நடைபெற்றுள்ளது.

நேற்று முன்தினம் காலை 9.30 மணிக்கு ஆரம்பமான இக் கருத்தரங்கு பிற்பகல் 4.00 மணிவரை இடம்பெற்றது.அம்பாறை மாவட்ட அரசியல்துறையைச் சேர்ந்த குயிலின்பன் தமிழீழதேசியக்கொடியை ஏற்றி வைத்ததைத் தொடர்ந்து நிகழ்வு ஆரம்பமானது.

மன்னார் மாவட்டத்தின் 2006 ஆம் ஆண்டுக்கான அபிவிருத்தி தொடர்பான இக் கருத்தரங்கில் தமிழீழ விடுதலைப்புலிகளின் முக்கிய உறுப்பினர் க.வே.பாலகுமாரன் திட்டமிடல் செயலக உதவிப்பணிப்பாளர் ரஞ்சன் லாலா, திட்டமிடல் செயலகத்தைச் சேர்ந்த செல்வின்,ஆகியோர் கலந்து கொண்டு அபிவிருத்தி தொடர்பான கருத்துக்களை வழங்கினர்.

இதில் மன்னார் மாவட்ட மேலதிக அரச அதிபர் உட்பட நாற்பதிற்கும் அதிகமான அரச அதிகாரிகள் கலந்து கருத்துக்களையும் திட்டங்களையும் சமர்ப்பித்தனர். இதில் மாவட்ட அரசியல்துறைப்பொறுப்பாளர் இனியவன் மாவட்ட நிர்வாக சேவைப் பொறுப்பாளர் சர்வன், மாவட்ட திட்டமிடல் மேம்பாட்டுப்பொறுப்பாளர் சுரட்பிரியன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

# சர்வதேச மனித உரிமைகள் தின நிகழ்வு

(அலுவலக செய்தியாளர்)

சர்வதேச மனித உரிமைகள் தினத்தை பிரதிபலிக்கும் நிகழ்வு ஒன்று கிளிநொச்சி கிருஷ்ணபுரம் றொபேட் முன்பள்ளி வளாகத்தில் நடைபெற்றுள்ளது.

கிளிநொச்சி அரச சார்பற்ற நிறுவனங்களின் இணை அனுசரணையுடன் டெனிஸ் அகதிகள் பேரவையின் நிதியீட்டில் கிளிநொச்சி அபிவிருத்தி அகதிகள் புனர்வாழ்வு கழகத்தினால் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற இந் நிகழ்வானது நேற்று முன்தினம் மாலை 3.30 மணியளவில் ஆரம்பமானது.

மங்கல விளக்கேற்றலுடன் ஆரம்பமான நிகழ்வில் தமிழீழ தேசியக் கொடியினை மாவீரர் தவா அவர்களின் தாயார் திருமதி மாணிக்கம் தனம் ஏற்றி வைத்தார்.

கிளிநொச்சி மாவட்ட அகதிகள் அபிவிருத்தி புனர்வாழ்வுக்கழக உபதலைவர் இரத்தினமணி தலைமையில் நடைபெற்ற மேற்படி நிகழ்வில் தலைமையுரையினை அடுத்து உரைகளை கிளிநொச்சி எழுச்சிபிரகடன குழு செயலாளர் அ.வேளமாலிகிதன், தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தைச் சேர்ந்த த.இராஜன்,திருநகர் ஊரக வளர்ச்சிப்பணித் தலைவர் ம.சிவபாலன், கரைச்சிப்பிரதேச சபைவிசேட ஆணையாளர் பொன்.நித்தியானந்தம் ஆகியோர் நிகழ்த்தினர். அத்துடன் மாணவ மாணவிகளின் மனித உரிமைமீறல் பற்றிய கருத்துக் களடங்கிய வில்லுப் பாட்டு, சிறுவர்களின் கும்மி நடனம் கவிதை, எழுச்சிப்பாடல் என்பனவும் நடைபெற்றன.

மேற்படி நிகழ்வில் யூ.என்எச். சி.ஆர். பிரதிநிதிகள்,டெனிஸ் அகதிகள் பேரவை பிரதிநிதிகள், பொறுப்பாளர்கள், போராளிகள், கிராம அலுவலர்கள் பொது மக்கள் எனப்பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். (கு)





படம் : சுகன்

# கண் சத்திரசிகிச்சை

(அலுவலகசெய்தியாளர்)

புதுக்குடியிருப்பு பொன்னம்பலம் ஞாபகார்த்த மருத்துவமனையில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெறவிருந்த கண்சத்திரசிகிச்சை நாளை வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது. ஏற்கனவே ஒன்பதாம் திகதி சிகிச்சைக்கு என பதிவுகளைமேற்கொண்ட அனைவரையும் மேற்குறிப்பிட்ட தினத்திற்கு பிற்பகல் 2.00மணிக்கு புதுக்குடியிருப்பு பொன்னம்பலம் மருத்துவமனைக்கு வருகை தருமாறு நிர்வாகத்தினர் வேண்டியுள்ளனர். (கு)

# வண்ணாங்கேணி குடியிருப்புப் பகுதிகளில் தொடர்ச்சியாகத் தேங்கியுள்ள மழை நீர்

(அலுவலக செய்தியாளர்)

அண்மைக்காலமாக பெய்துவரும் கனமழை காரணமாக மக்கள் குடியிருப்புக்களில் தேங்கியுள்ள மழைநீரானது சில பகுதிகளில் தொடர்ச்சியாக வழிந்தோடாமல் மக்களின்அன்றாட வாழ்க்கைக்கு இடையூறாகஇருந்து வருவதனைக் காணமுடிகின்றது.

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட தம்பலகாமம் கிராம சேவகர் பிரிவுக்குட்பட்ட கிராமமான வண்ணாங்கேணி வடக்குப் பகுதியில் உள்ள குடியிருப்புப்பகுதிகளிலேயே இவ்வாறு மழைநீர் தேங்கியுள்ளது.



படம் - சுகன்

மேலும் பிரதானமான வீதிகளிலும் சிறுவீதிகளிலும் மழைநீர் வழிந்தோடாமல் வெள்ளக்காடாகக் காட்சியளிக்கின்றன. இதனால் மழைநீருடன் தொடர்புடைய தொற்றுநோய்கள் ஏற்படும் வாய்ப்பு அதிகமாகக் காணப்படுகின்றது.

இவ்வாறு நீர் வழிந்தோடாமல் இருப்பதற்கு முக்கியகாரணமாக அமைவது வீதிகளின் இரு மருங்கும் நீர்வழிந்தோடும் வாய்க்கால் வெட் டப்படாமையும், உரிய இடங்களில் நீர் வழிந்தோடக்கூடிய நீர்குழாய்கள் அமைக்கப்படாததுமாகும். அத்துடன் ஏ-9 பிரதான வீதியில் இயக்கச்சிச்சந்தியிலிருந்து பளைநகர் வரை இடையிடையே பல பகுதிகளில் வீதி மேவி குறுக்கறுத்து வெள்ளம் தொடர்ச்சியாக பாய்ந்த வண்ணமுள்ளது. (கு)

## -பொருண்மிய மதியுரையகத்தால்-

# மாவீரர் குடும்பங்களுக்கு சேமிப்புக் கணக்கு ஆரம்பம்

(அலுவலக செய்தியாளர்)

முல்லைமாவட்ட பொருண்மிய மதியுரையகத்தின் மாவட்ட அலுவலகத்தில் ஜேர்மன் ரெக்கின் அனுசரணையுடன் 25 மாவீரர் குடும்பங்களுக்கு தலா 2500 ரூபா பெறுமதியான சேமிப்புக்கணக்குப் புத்தகமும் மாவீரரை நினைவு கூரும் முகமாக தென்னை மரக்கன்றும் வழங்கப்பெற்றது. மேற்படி நிகழ்வு கடந்த திங்களன்று நடைபெற்றது. ஜேர்மன்ரெக்கின் தலைவர் வலன்ரைன் நிகழ்வினை ஆரம்பித்து வைத்தார். இதனைத்தொடர்ந்து கருத்துரையினை பொருண்மியமதியுரையக நிறைவேற்றுப்பணிப்பாளர், நிர்வாகப் பொறுப்பாளர், முல்லை மாவட்ட இணைப்பாளர், மக்கள் கட்டுமானப்பயிற்சி ஆசிரியர், ஒட்டுசுட்டான் மாவீரர்,போராளி குடும்ப நலன்காப்பகப் பொறுப்பாளர், தேசிய எழுச்சிப்பேரவையினர் ஆகியோர் கருத்துரை வழங்கினர். (சோ)

## சடலம் கரையொதுங்கியது

(யாழ்ப்பாணம்)

யாழ். காங்கேசன்துறை மயிலிட்டிக் கடற்கரையில் இனந்தெரியாத ஆணின் சடலம் ஒன்று நேற்று முன்தினம் கரையொதுங்கியுள்ளது.

இவ்வாறு கரையொதுங்கிய சடலம் கடற்றொழிலாளி ஒருவருடையதாக இருக்கலாம் என சந்தேகிக்கப்படுகின்றது. இவரின் உடலில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களோ அல்லது அடிகாயங்களோ எவையும் காணப்படவில்லை. கடற்றொழிலுக்குச் சென்ற சமயமே இவர் உயிரிழந்திருக்கலாம் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

நாற்பது வயது மதிக்கத்தக்கவர். இவரின் சடலம் யாழ். போதனா மருத்துவமனையில் பொலிசாரால் நேற்று முன்தினம் பிற்பகல் 5.00 மணியளவில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (28,சி)

## யாழ்.கலை கலாச்சாரப் பேரவையால் கலைஞர்களின் விபரம் திரட்டல்

(யாழ்ப்பாணம்)

கலைஞர்களின் விபரங்களைத் திரட்டும் முயற்சியில் யாழ்.மாவட்ட கலைகலாச்சாரப் பேரவை ஈடுபட்டுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் வாழ்ந்து வரும் கலைஞர்களினதும் ... ம்பெயர்ந்து வேறு இடங்களில் வாழ்ந்து ...பவர்களினதும் மற்றும் இயற்கை எய்திய ...லைஞர்களின் விபரங்களையும் சேகரித்து அவற்றை ...ரு திரட்டாக வெளியிடுவதற்காக இப் பேரவை மேற்படி விபரங்களைக் கோரியுள்ளது.

இதற்கமைவாக கலைஞர்களென சமூகத்தால் அங்கீகரிக்கப் பெற்றவர்களின் விபரங்களும் கலைக்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்டவர்களும் அந்தந்தப் பகுதி பிரதேச செயலக கலாச்சார உத்தியோகத்தரிடம் 15-12-2005 ஆம் நாளுக்கு முன் விபரங்களைக் கையளிக்குமாறு அப்பேரவை கேட்டுள்ளது. அத்தோடு இறந்தவர்களினதும் இடம் பெயர்ந்தவர்களினதும் விபரங்களை அவர்களின் உறவினர்கள், நண்பர்கள் உரியவரின் புகைப்படத்துடன் கையளிக்குமாறு கேட்டுள்ளனர்.

## மந்தகதியில் இடம் பெற்று வரும் அனலைதீவு பொது மண்டப கட்டப் பணி

யாழ். அ... தீவுப் பகுதியில் நிகொட் நிறுவன நிதியுதவியுடன் நிறுவப்பட்டு வரும் பொது மண்டபக் கட்டடப் பணிகள் மந்தகதியில் இடம்பெற்று வருவதாக அப்பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

அனலைதீவு தெற்கு, அனலை தீவு வடக்கு ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளிலும் நிகொட் நிறுவன நிதியுதவியுடன் தனித்தனியாக இரு பொது மண்டபங்கள் அமைப்பதற்கு ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டிருந்தன.

இந்நிலையில் அனலைதீவு வடக்கில் நிறுவப்பட்டு வந்த பொது மண்டப வேலைகள் முழுமையாகப் பூர்த்தியடைந்துள்ளன எனினும் அனலைதீவு தெற்குப் பகுதியில் நிறுவப்பட்டு வரும் பொது மண்டப வேலைகள் மிக மந்த கதியிலேயே இடம் பெற்று வருகின்றன.

இம் மண்டபத்தைத் துரித கதியில் நிறுவிமுடிக்க வேண்டுமென்றும் மக்கள் கேட்டுக் கொள்கின்றனர். (37)

## வீதி புனரமைப்பு

நல்லூர் பிரதேச சபைக்கு உட்பட்ட கொக்குவில் கிழக்கு கோணாவளை வைரவர் வீதி, கோண்டாவில் வன்னியசிங்கம் வீதி, கொக்குவில் பிரம்படி குறுக்கு வீதிகள் விரைவில் புனரமைக்கப்பட இருப்பதாக பிரதேசசபை செயலர் பொ. வைரமுத்து தெரிவித்துள்ளார். மற்றும் இப்பிரதேசசபைக்கு உட்பட்ட பகுதிகளில் ரூ25.இலட்சம் செலவில் அபிவிருத்தி வேலைகள் மேற்கொள்ளப்பட இருப்பதுடன் கொக்குவில் நவீன சந்தைக்கான சுற்றுமதில்களை அமைத்தல் திருநெல்வேலி தொழிலாளர் குடியேற்ற திட்டத்தில் நீர்த்தொட்டி அமைத்தல் போன்ற வேலைத்திட்டங்களை தாம் முன்னெடுக்க இருப்பதாக அவர் தெரிவித்தார். (28)

# காணாமல் போனோர் தொடர்பில் அரசு அக்கறையின்மை ஆட்சேபித்து சர்வதேச நீதிமன்றில் முறையிட முடிவு

(யாழ்ப்பாணம்)

***யாழ். குடாநாட்டில் 1996, 1997 ஆம் ஆண்டு காலப்பகுதியில் படையினரால் கைது செய்யப்பட்டு காணாமல் போன அப்பாவி இளைஞர், யுவதிகள் தொடர்பில் சிறிலங்கா அரசாங்கமும் அன்றைய சனாதிபதியுமான சந்திரிகாவும் உரிய நடவடிக்கையினை இதுவரை எடுக்கப்படாமையை ஆட்சேபித்து சர்வதேச நீதிமன்றத்தை நாட பாதிப்புக்குள்ளானோர் முடிவுசெய்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.***

பாதிக்கப்பட்ட மக்களின் உண்மை நிலையினை பொறுப்பு வாய்ந்த அரசு என்ற வகையில் அமைதித்த சந்திரிகா மற்றும் இச்சம்பவங்களில் தொடர்புடைய இராணுவ அதிகாரிகளுக்கு எதிராகவும் சர்வதேச நீதிமன்றத்தை நாட பாதிப்புக்குள்ளான பிள்ளைகளை இழந்த பெற்றோர்கள் மற்றும் பாதுகாவலர் சங்கம், அன்னையர் முன்னணி போன்ற அமைப்புக்களே மேற்படி நடவடிக்கையினை எடுத்திருப்பதாக இதன் பிரதிநிதிகள் தெரிவிக்கின்றனர்.

இலங்கை அரசோ அரசின் நீதித் துறையின் மீதோ தாங்கள் நம்பிக்கை இழந்து விட்டதாகவும் இவர்களால் தமக்கு உரிய நீதி கிடைக்காது என்பதால் தாம் சர்வதேச நீதிமன்றத்தை நாட முடிவு செய்திருப்பதாக தெரிவித்துள்ளனர். (28)

## சனவரிமுதல் தென்மராட்சி, வேலணைப் பகுதிகளில் பிறப்பு, இறப்பு, விவாகப்பதிவு ஆரம்பம்

வரும் ஆண்டின் தொடக்க மாதம் முதல் தென்மராட்சி மற்றும் வேலணை ஆகிய பிரதேச செயலகங்களில் பிறப்பு, இறப்பு மற்றும் விவாக அத்தாட்சிப்பத்திரங்களை வழங்க யாழ். மாவட்டப் பதிவாளர் அலுவலக வட்டாரங்கள் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகத் தெரிவிக் கப்படுகிறது. தற்பொழுது சங்கானை, கோப்பாய், சண்டிலிப்பாய், தெல்லிப்பழை ஆகிய பிரதேச செயலகப்பிரிவுகளில் இவை நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதுடன் வரும்சனவரி முதல் சாவகச்சேரி, வேலணை ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளில் வசிக்கும் மக்கள் தமது பதிவுகளை மேற்கொள்ள முடியுமெனத் தெரிவிக்கப்படுகிறது. (28)

## வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட தென்மராட்சி மக்களுக்கு நிவாரணம் வழங்க நடவடிக்கை

தென்மராட்சிப் பிரதேசத்தில் தொடர்ந்து பெய்தமழையினால் சாவகச்சேரிநகர், மட்டுவில், கல்வயல், மந்துவில் கிழக்கு, மந்துவில் மேற்கு, மட்டுவில் வடக்கு, தாவளை இயற்றாலை, இடைக்குறிச்சி, வரணி இயற்றாலை, கைதடி தெற்கு போன்ற கிராம அலுவலர் பிரிவுகளில் 398 வீடுகள் சேதமடைந்து இருப்பதாக தென்மராட்சி பிரதேச செயலக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இம்மக்களுக்கான நிவாரண உதவிகளை மேற்கொள்ள தென்மராட்சிப் பிரதேச செயலக அதிகாரிகள் தீவிர நடவடிக்கைகளை மேற்கொண்டிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. (28)

## பருவகால மழையைத் தொடர்ந்து தொற்று நோய் பரவும் அபாயம்

பருவகால மழையைத் தொடர்ந்து குடாநாட்டில் தற்காலிக இடைத்தங்கல் முகாம்களில் தங்கியுள்ள மக்கள் தொற்று நோய்களால் பாதிக்கப்படும் அபாயம் இருப்பதாக சுகாதார வைத்திய அதிகாரி தெரிவித்துள்ளார்.

மழைக் காலங்களில் இலையான் பெருக்கம் அதிகரித்து இருப்பதாலும் மழைநீர் மக்களின் வதிவிடங்களில் சூழ்ந்து நிற்பதாலும் நுளம்புப் பெருக்கம் மற்றும் கிருமித் தொற்றுகள் ஏற்படும் சாத்தியக் கூறுகள் அதிகளவில் இருப்பதால் மக்கள் விழிப்புடன் இருந்து சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி தொற்று நோய்களில் இருந்து பாதுகாக்கும்படி தெரிவிக்கப்படுகிறது. (28)

## யாழ். தீவுப்பகுதிக்கு செல்லும் மக்கள் மீது கெடுபிடிகளை மேற்கொள்ளும் படையினர்

(வலிகாமம்)

யாழ். தீவுப் பகுதிகளுக்கான போக்குவரத்தை மேற்கொள்ளும் பொதுமக்கள் மீது சிறிலங்கா இராணுவத்தினர் மிகுந்த கெடுபிடிகளை விதித்து வருவதாக பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

உறவினர் வீடுகள், வியாபார நோக்கம் பாடசாலைகளுக்கு செல்லுதல் உட்பட பல்வேறு நோக்கங்களுக்காகச் செல்லும் பொது மக்களை வழிமறிக்கும் கடற்படையினர் அவர்கள் எடுத்துச் செல்லும் பொதிகளை தீவிர சோதனை செய்வதுடன் உடற் சோதனை மற்றும் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவிக்கின்றனர்.

வலி- மேற்கு- பொன்னாலைச் சந்திப் பகுதி, தீவகம் அல்லைப்பிட்டிச் சந்திப்பகுதி போன்ற இடங்களில் வைத்தே இத்தகைய தீவிர சோதனைகள் கெடுபிடிகள் இடம்பெற்று வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. இத்தோடு கரையோரப் பாதுகாப்புகள் அனைத்தும் பலப்படுத்தப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (37)

## படையினர் தேசவிரோதிகளை வெளியேறக் கோரி யாழ்.குடாநாட்டில் கருத்துப்படங்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.கோப்பாய் பிரதேசத்தில் படையினரையும் தமிழ்த்தேசியத்திற்கு விரோதமானவர்களையும் யாழ் குடாநாட்டை விட்டு வெளியேறுமாறு தெரிவித்து கருத்துப்படங்கள் ஒட்டப்பட்டுள்ளன.

யாழ். குடாநாட்டில் நிலைகொண்டுள்ள சிறிலங்காப் படையினராலும் மற்றும் அவர்களோடு சேர்ந்தியங்கும் துணைக்குழுக்களாலும் பொதுமக்களுக்கு இழைக்கப்படுகின்ற துன்பங்களை நிறுத்த வேண்டும். உடனடியாக எமது தாயக பிரதேசங்களை விட்டு வெளியேறி எமது மக்களின் சுதந்திரமான வாழ்விற்கு வழிசமைப்பதற்கு யாழ். குடாநாட்டை விட்டு வெளியேற வேண்டும் என சித்தரிக்கும் வகையில் அந்தக் கருத்துப்படங்கள் அமைந்துள்ளன.

யாழ். குடாநாட்டில் நிலைகொண்டுள்ள படையினரும் அவர்களோடு இயங்கும் ஏனைய துணைக்குழுக்களும் தாமாகவே யாழ்ப்பாணத்தை விட்டு வெளியேற வேண்டும்.இல்லையேல் மக்களால் அவர்கள் வெளியேற்றப்படுவது போன்ற காட்சிகளையும் காணக்கூடியதாக உள்ளது.

படையினருக்கு எதிராக நாளாந்தம் துண்டுப்பிரசுரங்கள், சுவரொட்டிகள் வெளியிடப்பட்டு வருகின்ற வேளையில் தற்போது இத்தகைய கருத்துப்படங்களும் முதற்தடவையாக வெளியிடப்பட்டிருக்கிறது. (கா)

## கடற்றொழில் உபகரணம் அன்பளிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். வடமராட்சியில் சுனாமியினால் பாதிக்கப்பட்ட கடற்றொழிலாளர்களுக்கு அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தால் கடற்றொழில் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

அந்தவகையில் நாகர்கோவில், திக்கம், அம்பன், கற்கோவளம் ஆகிய நான்கு கடற்கரையோரக் கிராமங்களைச் சேர்ந்த 89 கடற்றொழிலாளர்களுக்கே இக் கடற்றொழில் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன. இதில் ஒவ்வொரு கடற்றொழிலாளர்களுக்கும் தலா அறுபதாயிரம் ரூபாவிற்கு மேற்பட்ட கட்டுமரங்கள், வலைகள் என்பன வழங்கப்பட்டுள்ளன.

சுனாமி அனர்த்தத்தினால் தொழில் ரீதியாக தொழில் உபகரண இழப்புக்களைச் சந்தித்து தொழில் முயற்சிகளில் ஈடுபடமுடியாமல் வாழும் வறிய கடற்றொழிலாளர்களின் தொழில்தரத்தை மேம்படுத்துவதை நோக்காகக் கொண்டே அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் இக் கடற்றொழில் உபகரணங்களை வழங்கியுள்ளது. (33)

## வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட குடாநாட்டு மக்களுக்கு இல.செ.ச.உதவி

யாழ். குடாநாட்டில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பதினான்கு பிரதேச செயலகப்பிரிவுகளை உள்ளடக்கிய ஆறாயிரத்து அறுநூற்றி அறுபத்தாறு குடும்பங்களுக்கு வெள்ள நிவாரண பொருட்களை வழங்க இலங்கை செஞ்சிலுவைச்சங்க யாழ்.கிளை ஏற்பாடுகளைச் செய்திருப்பதாக சங்கம் தெரிவித்துள்ளது.

யாழ். மாவட்ட அரச அதிபரின் கோரிக்கைக்கு அமைவாக இவ் உதவிகளை கோப்பாய், யாழ்ப்பாணம், நல்லூர், கரவெட்டி, பருத்தித்துறை, சண்டிலிப்பாய், சங்கானை, சாவகச்சேரி, காரைநகர், வேலணை, தெல்லிப்பழை, உடுவில், நெடுந்தீவு ஆகிய பிரதேச செயலகப்பிரிவுகளில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. (28)

## பொன்னாலை கடற்றொழிலாளருக்கு தொடர்ந்தும் கடற்படை அச்சுறுத்தல்

பொன்னாலை கடற்பகுதியில் தொழிலில் ஈடுபடும் கடற்றொழிலாளர்கள் மீது படையினர் தொடர்ந்தும் அச்சுறுத்தல் மற்றும் நெருக்குவாரங்களை கட்டவிழ்த்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

அடிக்கடி படகுகள் சோதனையிடப்படுவதும் தொழிலாளர்கள் நீதியற்ற முறையில் விசாரிக்கப்படுவதும் மற்றும் தொழிலில் ஈடுபடுகின்றவர்களுக்கு கடற்படையினர் விதித்துள்ள பாஸ், நடைமுறைகளால் பெரிதும் பாதிக்கப்பட்டு வருகின்ற மீனவர்கள், சுதந்திரமான தொழிலை மேற்கொள்வதில் தொடர்ந்தும் இடையூறுகளை மேற்கொண்டு வருவதாகவும் கடற்றொழிலாளர் சங்கங்கள் குற்றஞ்சாட்டியுள்ளன. (28)

# அரசியல் யாப்பின் 13 ஆவது திருத்தச்சட்டத்தின் பின்

# இலங்கையை ஒற்றையாட்சி நாடு எனக் கூற முடியாது

**இறுதிதினஞாயிறு வார நாளிதழ்**
**வெளிநாட்டு அமைச்சின் முன்னைய செயலாளர் நாயகம் கல்யாணந்த கொடகே**
**மொழியாக்கம்:-அ.சக்திவேல**

எதிர்க்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் திட்டம் சர்வதேச சமூகங்களின் நிர்ப்பந்தத்தினால் ஐக்கியஇலங்கைக்குள் சமஷ்டி ஆட்சி அதிகாரப் பரவலாக்கல் மூலம் நிர்வாகத்தை விடுதலைப் புலிகளின் கட்டமைப்புக்கு வழங்கி ஆட்சியை நடத்துவதாக இருந்தது. ஆனால் தற்பொழுது புதிய சனாதிபதி அவர்கள் பதவிஏற்றபின் மேற்கூறிய திட்டங்கள் யாவும் எதிர்மாறாக உள்ளது. ரணில் விக்கிரமசிங்கவுக்கு சர்வதேச சமூகத்திடம் நல்ல வரவேற்பு இருந்தது. ஆனால் மகிந்தராஜபக்ஷவுக்கு சர்வதேச சமூகத்திடம் உள்ள ஆதரவு பற்றி எமக்கு ஆருடம் கூறமுடியாது. ரணில் விக்கிரமசிங்க வின் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் மூலம் விடுதலைப் புலிகளைத் தனது வலையில் சிக் கவைக்கும் இராஜதந்திர முயற்சிகளைப் புலிகள் உடைத் தெறிந்து விட்டனர்.

தென்பகுதி அரசாங்கம் விடுதலைப்புலிகளின் நியாயமான கோரிக்கைகள் இனவாதிகளின் தலையீடுகள் இன்றி தீர்த்துவைக்கப்போவதாக என்று சர்வதேச சமூகங்களுக்கு உறுதி அளித்திருந்தது தற்பொழுது அந்த உறுதிமொழிகள் நிறைவேற்றப்படுமா என்ற கேள்வி சர்வதேச சமூகங்களின் கவனத்தை ஈர்த்துள்ளது. இதற்கு முக்கிய காரணங்கள் சனாதிபதி மகிந்தராஜபக்ஷவைச்சுற்றி இனவாதக்கும்பல்கள் இருக்கின்றபடியால் இத்திட்டத்தை நிறைவேற்ற முடியாது. மறைந்த சனாதிபதி ஆர்.பிரேமதாசாவின் ஆட்சிக்காலத்தில் ஜே.வி.பி.யின் அழுத்தங்கள் பிரேமதாசாவுக்கும் இருந்தது. தற்பொழுதும் மகிந்தராஜபக்ஷவுக்கும் ஜே.வி.பி.யின் அழுத்தங்களும் ஜாதிகஹெல உறுமயவின் அழுத்தங்களும் உள்ளபடியால் இதை நிறைவேற்றுவது சுலபமான காரியமல்ல.

ஜே.வி.பி,ஜாதிகஹெலஉறுமய போன்றன நாட்டை ரணில் விக்கிரமசிங்க விடுதலைப்புலிகளுக்குத் தாரை வார்த்துக் கொடுக்கப்போகிறார் என்று தேர்தல் பிரச்சாரம் செய்து சிங்கள மக்களின் கவனத்தைத்திசைதிருப்பினர். புலிகளின் தலைவர் பிரபாகரனுக்கும், எதிர்க்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில் நாட்டைப் பிரிக்கும் உடன்படிக்கை இரகசியமாக கையொப்பம் இடப்பட்டுள்ளது என்ற பிரச்சாரம் சிங்கள மக்களைக் கவர்ந்தபடியால் ரணில் விக்கிரமசிங்க தோல்வியைத் தழுவிக்கொண்டார்.

ஆனால் தேர்தல் பெறுபேறுகள் இவை



யாவற்றையும் பொய்யாக்கி விட்டது.

இதில் சிங்கள மக்கள் நன்றாக ஏமாந்துவிட்டார்கள். ஆகவே தற்பொழுது ஜே.வி.பி.,ஜாதிகஹெலஉறுமயவின் கூற்றுக்கள் பொய்யாகிவிட்டன. இனவாதிகளான ஜே.வி.பி யும், ஜாதிகஹெலஉறுமயவும் மகிந்தராஜபக்ஷவுக்குக் கிடைத்தவெற்றியைப் பயன்படுத்தி மறுபடியும் வெளிநாட்டுக்கொள்கைகளில் மாற்றங்களைக் கொண்டு வந்ததுடன் ரணில் விக்கிரமசிங்கவின் சமாதானக் கூட்டு ஒப்பந்தமும் செல்லுபடியாகுமா? இல்லையா? என்ற கேள்விக்குறியில் உள்ளது.


ரணில் விக்கிரமசிங்க விடுதலைப்புலிகளைச் சர்வதேச வலைக்குள் சிக்கவைப்பதை நன்கு உணர்ந்த விடுதலைப்புலிகள் ரணிலை இம்முறை சனாதிபதித் தேர்தலில் தோற்கடித்தனர். ஆகவே மகிந்தராஜபக்ஷவின் வெற்றி விடுதலைப்புலிகளின் அரசியல் நகர்வுகளுக்கு சிறந்த இராஜதந்திரவழியைத் திறந்துள்ளது.

மீண்டும் ரணில் ஆட்சியைக் கைப்பற்றினால் புலிகளைச் சர்வதேச வலைக்குள் சிக்கவைப்பார் என்று மாவீரர்தின உரையில் விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன்தெளிவாக எடுத்துக் கூறியுள்ளார். ஆகவே தெற்கில் ஜே.வி.பி யும், வடக்குக்கிழக் கில் விடுதலைப்புலிகளும் ரணில் விக்கிரமசிங்கவைத் தோற்கடித்துள்ளனர். ஜே.வி.பி.யும் ஜாதிகஹெல உறுமயக் கட்சியும் மகிந்தராஜபக்ஷவோடு இணைந்திருப்பதினால் தமிழர்களுக்கு எதையும் கொடுக்கமாட்டார்கள் என்று ஏற்கனவே தெளிவாகத் தெரிந்துவிட்டது. இதன் பிரதிபலன்களை வடக்குக்கிழக்கில் நடக்கும் சம்பவங்கள் எடுத்துக்காட்டி வருகின்றன.

மற்றும் இனப்பிரச்சினை சம்பந்தமாக இந்திய அரசை சம்பந்தப்படுத்துவதற்கு எடுத்த முயற்சிகள் தோல்வி அடைந்துள்ளன. இலங்கையின் பிரதிநிதியாக வெளிநாட்டமைச்சர் மக்களசமரவீரவின் இரண்டு நாட்கள் இந்தியப்பிரதமர் மன்மோகன்சிங்கைச் சந்தித்து இலங்கை இனப்பிரச்சினை சம்பந்தமாகக் கலந்தாலோசித்துள்ளார்.

ஆனால் இலங்கை இனப்பிரச்சினையில் இந்தியா தலையிடாது என இந்தியப்பிரதமர் கூறிவிட்டார். இந்திய அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் தி.மு.கட்சியின் சில தலைவர்கள் இனப்பிரச்சினையில் இந்தியா தலையிடுவதை முற்றாக எதிர்த்தபடியால் இத்திட்டம் தோல்வி கண்டுள்ளது. ஆகவே ராஜபக்ஷவுக்கு இது ஒரு தோல்வியாகவே அமைந்துள்ளது.

பிரேமதாசாவின் ஆட்சிக்காலத்தில் ஜே.வி.பி. யும், பிரேமதாசாவும் காட்டிய எதிர்ப்புக்களாலும் இந்தியா இலங்கையில் அவமானப்படுத்



தப்பட்டதாலும் தற்போதைய இலங்கை இனப்பிரச்சினையில் தலையிட வேண்டாம் என தி.மு.க.தலைவர்களில் ஒருவர் கூறியுள்ளார்.

அன்று பிரபாகரன் அவர்கள் தனிநாட்டுக்காகப் போராடுகிறார் என்று கூறி இலங்கை அரசுக்கு ஆதரவாக இந்திய இராணுவம் களம் இறங்கி 1272 இராணுவத்தினரை இலங்கை மண்ணில் இழந்ததுடன் 2800 இற்கும் மேற்பட்ட இராணுவத்தினர் படுகாயமடைந்து அங்கவீனமாக்கப்பட்டார்கள்.

ஆனால் பிரேமதாசாவின் ஆட்சியின் பொழுது ஜே.வி.பி யின் எதிர்ப்புக் கோசங்களால் இந்தியப்படையை பிரேமதாசா மீண்டும் இந்தியாவுக்குத் திருப்பி அனுப்பினார். இதில் இந்திய அரசு தோல்வியை மட்டும் அல்ல அவமானத்தையும் சம்பாதித்துக் கொண்டது.

ஆகவே ரணில் விக்கிரமசிங்க சர்வதேச வலையின்னலில் புலிகளைச் சிக்கவைக்கும் தந்திரோபாயம் மகிந்தவின் வெற்றியினால் தோல்வி கண்டது.

இது புலிகளுக்குக் கிடைத்த இராஜதந்திர வெற்றியாகும். மற்றும் மங்கள சமரவீர ஐக்கிய இலங்கைக்குள் அதிகாரப்பரவலாக்கல் முறையை அமுல்ப்படுத்தப் போவதாகஇந்திய அரசாங்கத்திற்கு உறுதி அளித்துள்ளார். இது ஒஸ்லோ பிரகடனத்தில் வெளியிடப்பட்ட தொன்றாகும் எனச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆனால் மங்களசமரவீரவும், ஜே.வி.பி., ஜாதிகஹெலஉறுமய கட்சியும் ஒற்றையாட்சியின் கீழ் அதிகாரப்பரவல் என்று மேடையில் முழங்கினார்கள். தேர்தலின் பின் இது பொய்யாகிவிட்டது.

அரசியல் யாப்பின் 13ஆவது சட்டமூலம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட பின்பு இலங்கையை ஒற்றையாட்சி நாடு என்று கூறமுடியாது. இதை அரசியல் கற்றுணர்ந்த ஜே.வி.பி,ஜாதிகஹெல உறுமய கட்சியும் இதுவரை தெரிந்து கொள்ளாமல் இருப்பதைப்பற்றி நாம் கவலை அடைகிறோம்.

ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவும், ஆர்.பிரேமதாசாவும் இந்திய அரசாங்கத்தைக் குழப்பத்தில் ஆழ்த்தி இனப்பிரச்சினையை மீண்டும் சிக்கலாக்கினார்கள்.

அன்றும் இன்றும் ஜே.வி.பி நாட்டைக் குழப்பத்தில் சீரழிக்கும் தந்திரோபாயத்தைக் கடைப்பிடித்துவந்துள்ளது.

சமஷ்டி முறையின் கீழ் ஆட்சியைப் பகிர்ந்தளிப்பதே சிறந்தவழியாகும்.

சிறுபான்மை இனத்தவர்களின் உரிமைகளைப் பாதுகாப்போம் என்று அரசாங்கம் சர்வதேச சட்டங்களின் நியதிகளுக்குக் கையொப்பம் இட்டுள்ளது.

ஆனால் வடக்குகிழக்கு சிறுபான்மையினரின் பிரச்சினைகளை பெரும் சிக்கலாக்கி இக்கட்டான நிலைக்குத்தள்ளியுள்ள சரித்திரத்தை நாங்கள் மறக்க முடியாது.

மக்கள் அரசு என்ற யாப்பைத் தயாரிக்கும் பொழுது ஒரு மொழி இரண்டு நாடுகள் என்ற அவரின் கூற்றை மறந்து விட்டார்கள். தேசிய கீதத்தில் [illegible] தமிழர்களின் நிலைப்பாடு என்ன? சிறுபான்மை இனத்தவர்களாக வடக்கு கிழக்கில் ஆரம்பித்த உரிமைப் போராட்டம் இன்று புலிகளின் தலைவர் தலைமையின் கீழ் தமிழர்களும் பெரும்பான்மை பலம் கொண்டவர்கள் என நிரூபித்துள்ளனர். எங்களுக்கு என்ற சொந்தமண் உண்டு. சுனாமிப் பேரழிவின் அதிக உதவிகளை வடக்கு கிழக்கிற்கு வழங்கவேண்டும் எனக்கோரி உலகறியச் செய்தவர்கள். இதைச் செய்ய வேண்டாம் எனத்தடுத்து நிறுத்தியவர்கள் ஜாதிகஹெலஉறுமய, ஜே.வி.பி ஆகிய இரண்டு கட்சிகளுமாகும். இவர்களின் செய்கையால் இன்று வடக்குக்கிழக்கு தீப் பற்றி எரிகின்றது. வடக்கில் தனிநாடு உருவாகுவதை இந்தியா தடுத்துநிறுத்தும் என்று கூறுவது சிறுபிள்ளைகளுக்குக் கதை சொல்வதற்குச் சமமாகும். எந்த அரசாங்கமாக இருந்தால் என்ன தனக்கு எதிர்ப்புக்கள் கிளம்பும் பொழு[illegible] நேரத்தில் என்ன நடவடிக்கைகள் எடுப[illegible] என்பது அந்த எதிர்ப்பின் தன்மையை[illegible]த்ததாக அமையும்.

நோர்வே அமைதி ஏற்பாட்டாளர்களை அமைதிப் பேச்சில் இருந்து விலக்குவது போர் நிறுத்தத்தை மறுபரிசீலனை செய்வது சனாதிபதித் தேர்தலின் [illegible] நிறைவேற்றுவோம் என ஜாதிகஹெலஉறுமயக் கட்சியும், ஜே.வி.பியும் பிரச்சாரங்களை மேற்கொண்டதையும் தொண்டைக்கிழிய மேடைகளில் கத்தியதையும் இந்தநாட்டில் உள்ள மக்கள் மறக்கமாட்டார்கள். ஆனால் இன்று சனாதிபதி மகிந்தராஜபக்ஷ அவர்கள் நோர்வே நாட்டை மீண்டும் சமாதானப் பேச்சுக்களில் கலந்து கொள்ளுமாறு கேட்டுள்ளார். மற்றும் போர்நிறுத்த ஒப்பந்தத்தை மீள் பரிசீலனை செய்வது தனித்து ஒரு பிரிவினரால் முடியாதெனவும் கூறியுள்ளார். ரணிலின் சமாதான நடவடிக்கையை முன்னெடுத்துச் செல்வதைத்தவிர மகிந்தராஜபக்ஷவுக்கு வேறு மார்க்கம் கிடையாது. ஜே.வி.பி,ஜாதிகஹெலஉறுமயக் கட்சிகளின் நிபந்தனைகளைத் தூக்கி எறிந்து விட்டு இவர் சமாதான நடவடிக்



கையை முன்னெடுத்துச் செல்லவேண்டும்.

சந்திரிகாவை ஒரு தலைவி என எங்களால் ஏற்றுக்கொள்ள முடியாது. அதேநேரத்தில் மகிந்தராஜபக்ஷ ஒரு கௌரவத்தலைவர் என்பதை நாம் ஏற்றுக்கொள்கிறோம். அவர் சமாதானப் பேச்சு வார்த்தைகளை மிகநுணுக்கமாக ஆராய்ந்து வருகிறார். ஆகவேதான் ரணிலின் அடிச்சுவட்டைப் பின் பற்றி வருகின்றார். ஐக்கிய தேசியக்கட்சியின் அனுசரணை இல்லாமல் சமாதானப் பேச்சுவார்த்தைகளை அவரால் முன்னெடுத்துச் செல்ல முடியாது. ஜே.வி.பி.யும், ஜாதிகஹெல உறுமய கட்சியும் இம்முறை சனாதிபதித் தேர்தலின்போது மக்களின் வாக்குகளை இரத்துச்செய்வதற்கு சூழ்ச்சி செய்ததை ஐக்கிய தேசியக்கட்சி மறந்துவிடவில்லை. ஆகவே ஐக்கிய தேசியக்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவினால் தனித்தீர்மானங்களை மேற்கொள்ள முடியாது.

வடக்கில் ஆட்சி பெரும் நெருக்கடிக்குள் தள்ளப்படுமானால் தெற்கு அரசாங்கத்தினால் வடக்கின் ஆட்சியைக் கட்டுப்படுத்த முடியாத நிலை ஏற்படும். தெற்கின் சிங்கள பெரும்பான்மை மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து வடக்கில் வாழும் பெரும்பான்மை மக்களின் கோரிக்கைகள் நியாயமானவை என்றும் அவர்களுக்கு இந்த உரிமைகள் [illegible] வழங்கப்படுவது அவசியம் என்றும் கூறும் வரை இந்த நாட்டுப்பிரச்சினையைத் தீர்க்கமுடியாது.

# மகிந்தவின் செயற்பாடுகள் குறித்து ஜே.வி.பி பாராளுமன்றத்தில் காட்டமான விமர்சனம்

(கொழும்பு)

**மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தின் ஆதரவுக்கட்சியும் மகிந்தராஜபக்ஷ சனாதிபதியாவதற்கு முன்னின்று உழைத்ததுமான ஜே.வி.பி சனாதிபதியின் பல்வேறு நடவடிக்கைகளைப் பாராளுமன்றத்தில் காட்டமாக விமர்சித்துள்ளது.மகிந்தவின் சிந்தனைகள் மீதான பாராளுமன்ற விவாதத்தில் ஜே.வி.பி.யின் முக்கிய தலைவர் நந்தனகுணதிலக்க பேசும் போது சனாதிபதி மீது இந்த விமர்சனத்தை வெளியிட்டுள்ளார்.**

தார்மீக அரசியல் நெறிமுறைகளைப் பின்பற்ற வேண்டும் என்பதற்காகத்தான் மகிந்தவுக்கு மக்கள் வாக்களித்துள்ளனர். ஆனால் அதற்கான வாய்ப்பு இப்பொழுது இல்லை என்று தெரிகிறது. கூடுதல் எண்ணிக்கையான பாராளுமன்ற உறுப்பினர்கள் உயர்பதவிகளில் நியமிக்கப்பட்டுள்ளமை மக்களின் விருப்பங்களுக்கு எதிரானது.

ஒற்றையாட்சியைக் காப்பாற்றவும் நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்காகவும் மட்டும் மக்கள் மகிந்தவுக்கு வாக்களிக்கவில்லை. அரசியல் கலாச்சார சீரமைப்புக்குத் தான் வாக்களித்துள்ளனர். ஆனால் மக்களின் விருப்பத்தை நிறைவேற்ற ஒரு அடியைக்கூட மகிந்த அரசாங்கம் எடுத்து வைக்கவில்லை. சில பாராளுமன்ற உறுப்பினர்கள் தார்மீகக் கட்டுப்பாடுகளை மீறி சனாதிபதிக்கு அழுத்தம் கொடுத்து அமைச்சுப் பதவிகளைக் கைப்பற்றியுள்ளனர். இத்தகைய நபர்கள் மக்களுக்குக் கடமையாற்றுவதை விட தங்கள் நலனையே முக்கியம் எனக் கருதுகின்றனர்.

அழுத்தங்கள் , உள்முரண்கள் இருந்தாலும் மகிந்த ராஜபக்ஷ தனது அமைச்சரவையைக் குறைப்பார் என்றும் ஜே.வி.பி.நம்புகின்றது. இதுபோன்ற உறுதியான நடவடிக்கைகள் மூலமே மக்களுக்குச் சரியான செய்தியைச் சொல்ல முடியும். மக்கள் நலனுக்குத்தான் அரசாங்கம் முன்னுரிமை அளிக்க வேண்டுமே தவிர தனி நபர்களின் சுய விருப்பங்களுக்கு அல்ல.

80இற்கும் மேற்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்களை அமைச்சர்களாக அமைச்சரவை அந்தஸ்தற்ற அமைச்சர்களாக்கியிருப்பது மக்களின் விருப்பத்திற்கு எதிரானது.

ஒரு அமைச்சர் 14 மில்லியன் ரூபா மதிப்பிற்கு வாகனம் ஒன்றை வாங்கியுள்ளார். இது மக்களின் விருப்பத்தை கீழே போட்டு மதித்துள்ள செயல். இதற்கான ஆதாரம் எங்களிடம் உள்ளது. மகிந்தராஜபக்ஷவின் வெற்றிக்காகக் கடுமையாக உழைத்த எங்களுக்கு இது தொடர்பில் கேள்வி எழுப்பும் உரிமையும் கடமையும் உண்டு.

இந்தப் பணத்தை எங்களிடம் கொடுத்திருந்தால் பாணந்துறையில் மூன்று மாடிப் பாடசாலையைக் கட்டியிருப்போம் அல்லது பொல்கொட கால்வாயை ஐந்து கிலோமீற்றர் தூரத்திற்குப் புனரமைப்புச் செய்திருப்போம். சில அமைச்சர்கள் மக்களுக்குச் சேவையாற்றுவதில் ஈடுபாட்டோடுள்ளனர். அத்தகைய அமைச்சர்களை ஜே.வி.பி ஆதரிக்கும் அதே நேரத்தில் மற்றவர்களை அம்பலப்படுத்துவோம்.

பெரிய தொழில் நிறுவனங்களிடமிருந்து 13 ரூபாவுக்கு ஒரு யூனிட் மின்சாரத்தை அரசாங்கம் வாங்குகிறது. சிறு மின் உற்பத்தியாளர்களிடமிருந்து ஆறு ரூபாவுக்கு ஒரு யூனிட் மின்சாரம் வாங்கவும் வழியிருக்கிறது. ஆனால் பெரிய நிறுவனங்களுடன் சில அரசியல்வாதிகளுக்கு உள்ள தொடர்பினால் பெருந்தொகைக்கு அரசாங்கம் மின்சாரத்தை வாங்குகிறது.

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்டுள்ள தெற்கு,வடக்கு-கிழக்கு மக்களுக்கான மீளமைப்புப் பணிகளை உடனே நடைமுறைப்படுத்த வேண்டும். ஆழிப்பேரலை பாதிப்பு ஏற்பட்டு ஓராண்டு ஆகிவிட்ட நிலையில் ஆயிரக்கணக்கான மக்களினது அடிப்படைத் தேவைகள் கூட பூர்த்தி செய்யப்படவில்லை. இந்தக் குறைபாடுகள் இருந்த போதும் இரத்மலானை மற்றும் அம்பாந்தோட்டை மக்கள் மகிந்தவுக்கே வாக்களித்துள்ளனர். தற்போதாவது அந்த மக்களின் இயல்பு வாழ்க்கையை மீளக் கட்டமைக்கும் நடவடிக்கைகளை மகிந்த அரசாங்கம் மேற்கொள்ளவேண்டும் என்றார் அவர்.

## முக்கிய பிரமுகர்களை அச்சுறுத்தும் புதிய மென்பொருளால் அபாயம்

(கொழும்பு)

நாட்டின் முக்கிய நபர்கள் பயணிக்கும் இடங்கள் மற்றும் பாதைகளை கையடக்கத் தொலை பேசியினூடாக சோதனையிடக் கூடிய மென்பொருட்களை சிறிலங்காவின் தனியார் நிறுவனம் உரிய அனுமதியின்றி கொண்டு வந்துள்ளது.

இந்த மென்பொருளை கையடக்கத் தொலைபேசியில் பொருத்தினால் குறித்த நபர் பயணிக்கும் இடங்கள் மற்றும் பாதைகளை நேரத்துடன் பெற்றுக்கொள்ள முடியும். பாதுகாப்பு அச்சுறுத்தல் இருக்கும் முக்கிய பிரமுகர்களுக்கு இந்த மென்பொருள் பெரும் பிரச்சினையாகியுள்ளது.

முக்கிய பிரமுகர்களிடம் இந்த மென்பொருள் பொருத்தப்பட்ட கையடக்கத் தொலைபேசி இல்லாவிடினும் அவருடன் செல்லும் படையினரேனும் அந்த மென்பொருளுடனான தொலைபேசியைப் பயன்படுத்தினால் அவர்களின் பயணத்தைப் பற்றிய தகவல்களை அறிந்து கொள்ள முடியும்.

பரீட்சார்த்த நடவடிக்கைக்காக இத்தகைய மென்பொருளை சிறிலங்காவுக்கு அந்த தனியார் நிறுவனம் கொண்டு வருவதற்கு தொலைத் தொடர்புகள் ஆணைக்குழுவிடம் அனுமதி கோரியிருந்தது.

எனினும் தற்போது பல்வேறு தனியார் நிறுவனங்கள் அவற்றை இலங்கையில் விற்பனை செய்ய ஆரம்பித்துள்ளன.

இது சட்டவிரோத செயல் என்பதால் அதற்கெதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என்று தொலைத் தொடர்புகள் ஆணைக்குழு வட்டாரங்கள் தெரிவித்தன.

# அவுஸ்.சிட்னி நகரில் தமிழீழ தேசிய நினைவெழுச்சி நாள்-2005 நிகழ்வு

அவுஸ்திரேலியாவின் சிட்னிமாநகரில் தமிழீழ தேசிய நினைவெழுச்சி நாள் -2005 நிகழ்வு சனிக்கிழமை பேரெழுச்சியுடன் நடைபெற்றது.

சிட்னி மேற்குப் பல்கலைக்கழகத்தில் ஆயிரக்கணக்கானோர் பங்கேற்க மண்டபம் நிறைந்த நிகழ்வாக





இந்த நிகழ்சி நடைபெற்றது.

இந்நிகழ்வில் வீரவேங்கை ஜெமினி என்றழைக்கப்படும் சுப்பிரமணியம் திருநாவுக்கரசுவின் தாயார் பொதுச் சுடரினை ஏற்றினார். மேஜர் சலீம் என்றழைக்கப்படும் பிறின்ஸ்ரன் அல்போன்சசின் தாயார் ஈகச்சுடரேற்றினார்.

இதனைத் தொடர்ந்து தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் தம் இன்னுயிர்களை ஈந்த மாவீரர்களுக்காகவும், அரச பயங்கரவாதத்தில் அப்பாவித்தனமாகக் கொல்லப்பட்ட பொது மக்களுக்காகவும் அகவணக்கம் செலுத்தப்பட்டது.

மாவீரர்களுக்கான மாதிரிக் கல்லறைகளில் மாவீரர் படங்கள் வைக்கப்பட்டு மலர்களால் அலங்கரிக்கப்பட்டிருந்த துயிலும் இல்லங்களுக்கு மாவீரர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் தங்கள் அருமைச்செல்வங்களை நினைத்து மலர்தூவி அகவணக்கம் செலுத்தினர்.

அதனைத் தொடர்ந்து பொதுமக்கள் வரிசையாகச் சென்று மலர்தூவித் தமது அகவணக்கத்தைச் செலுத்தினர். இந்த நிகழ்வின் போது துயிலும் இல்லப்பாடல் ஒலிக்க விடப்பட்டது.

இதனைத் தொடர்ந்து நடன ஆசிரியை சுகந்தி துபாசிலனின் நெறியாள்கையில்வென்றவேர்த்வில் தமிழ்ப்பாடசாலை மாணவர்களின் " மாவீரர் புகழ்பாடும்" நடன நிகழ்ச்சி நடைபெற்றது.

சிட்னி தமிழர் ஒருங்கிணைப்புக் குழு நடத்தும் தமிழாலயம் மாணவர்கள் "தன்கையே தனக்கு உதவி" என்ற நாடகத்தை வழங்கினர். தாய் மண்ணில் அல்லலுறும் வயோதிபர், பெற்றோரை இழந்த சிறுவர்கள் நிலையை உணர்த்தும் முகமாகவும் புலம்பெயர் மக்கள் அவர்களுக்கு எப்படி உதவ முடியும் என்பதையும் காட்டுவதாக சிறுவர்களின் இந்த நாடகம் அமைந்திருந்தது.

கவிநிதாவின் நெறியாள்கையில் "மீண்டும் வருகின்றோம்" நடனமும் நடத்தப்பட்டது. தமிழீழ தேசியத்தலைவர் மேதகு வே.பிரபாரன் அவர்கள் ஆற்றிய உரை அகலத்திரையில் காண்பிக்கப்பட்டது.

மேஜர் டயஸ் கந்தசாமி தவராஜாவின் சகோதரரும் சிட்னி தமிழர் ஒருங்கிணைப்புக்குழுவின் அரசியல் சபை உறுப்பினருமான தனபால் உரையாற்றினார்.

நிகழ்ச்சியின் சிறப்பம்சமாக அவுஸதிரேலிய வரலாற்றில் முதல் தடவையாக எம்தாயக உணர்வுப் பாடல்களை அவுஸ்திரேலிய வாழ் கலைஞர்கள் உயிரூட்டி ஒலிப்பெட்டகமாக வெளியிட்டனர். சிட்னியிலுள்ள கலை பண்பாட்டுக்கழகம், சிட்னி சப்தஸ்வரா இசைக்குழுவினரின் முயற்சியுடன் இந்த ஒலிப்பெட்டகம் "நெஞ்சதனில் உம்மை நிறுத்தி" என்னும் பெயரில் வெளியிடப்பட்டது.

உள்ளூர் இசைக்கலைஞர்கள் தமது இனிய இசையில் மாவீரர் புகழ், தாய்மண்ணின் விடுதலை, ஆழிப்பேரலையின் கொடுமை, இவற்றைப் பற்றிப் பாடியிருந்தார்கள். கலை பண்பாட்டுக்கழகம் இதனைத் தமது முதல் வெளியீடாக வெளியிட்டுள்ளது.

நடனாசிரியை திருமதி மிருணாளினியின் நெறியாள்கையில் உண்மைச் சம்பவத்தை மையமாகக் வைதது தயாரிக்கப்பட்ட "தியாகதீபம்"நாட்டிய, நாடகம் நிதர்சினி சுதர்சன் நெறியாழ்கையில் "ஆடிப்பாடுவோம் கூடிப் பாடுவோம்" என்ற பாடலுக்கு நடனம் மற்றும் நேசராஜா பாக்கியநாதனின் நெறியாழ்கையில் "மனதுக்குள் ஒரு மண்டபம்" நாடகம் ஆகியன நிகழ்வில் இடம்பெற்றன.

அவுஸ்திரேலிய இன்பத்தமிழ் ஒலிவானொலியின் அறிவிப்பாளரான கானாபிரபா, தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவைச் சேர்ந்த சிறீபாலன் ஆகியோர் இந்த நிகழ்வுகளைத் தொகுத்து வழங்கினர்.

# வெடிபொருட்களை கண்டறிய கொழும்பில் விசேட நடவடிக்கை!

(கொழும்பு)

மறைத்து வைக்கப்பட்டுள்ள வெடிபொருட்களை கண்டறிய சிறிலங்காப் பொலிசார் நேற்று முன்தினம் முதல் விசேட நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளனர். இந்த வெடிபொருட்கள் கொழும்பு மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் மறைத்து வைக்கப்பட்டிருக்கலாம் என பொலீசார் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில் அவற்றை வேறு இடங்களுக்கு எடுத்துச் செல்லும் போது மோப்ப நாய்களின் துணையுடன் கண்டறியும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸ்மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ தெரிவித்தார்.

பொலிஸ் தலைமையகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் உரையாற்றிய அவர் கொழும்பு நகரில் வாகன நெரிசலைத் தவிர்க்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவித்தார். (32)

# உலக வர்த்தக அமைச்சர்கள் மாநாட்டின் தீர்மானங்கள் வளர்முக நாடுகளைப் பெரிதும் பாதிக்கும் அபாயம்!

**-சிறீலங்கா கையெழுத்திடாது என்கிறார் அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே**

(கொழும்பு)

உலகவர்த்தக அமைச்சர்களின் மாநாட்டில் சிறிலங்காவுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் எந்த ஒப்பந்தத்திலும் கையெழுத்திடப்பட மாட்டாது என வர்த்தக நுகர்வோர் அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே தெரிவித்துள்ளார்.

இந்த மாநாடு நேற்று முன்தினம் ஆரம்பமானது. இது எதிர்வரும் 18 ஆம் திகதி வரை ஹொங்கொங்கில் நடைபெறவுள்ளது.

இந்த மாநாட்டிற்கு எதிராக உலகளாவிய ரீதியில் பாரிய எதிர்ப்புக்கள் ஏற்கனவே இடம்பெற்று வருகின்றன.

இந்த மாநாட்டில் சர்வதேச ரீதியாக விவசாயம், விவசாயம் சாராத துறை மற்றும் வர்த்தகசேவை. தொடர்பான ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்படவுள்ளன.

விவசாயம் தொடர்பான ஒப்பந்தத்தில் சிறிலங்கா கையெழுததிடுமானால் சிறிலங்கா போன்ற வளர்ந்துவரும் நாடுகளின் விவசாயிகள் பெரும் பாதிப்பை எதிர்நோக்கக் கூடும் என தேசிய காணி மறுசீரமைப்பு மற்றும் கமத்தொழில் அமைப்பு தெரிவிக்கின்றது.

எனினும் இந்த விடயம் குறித்து ஹொங்கொங் சென்றுள்ள வர்த்தக நுகர்வோர் அமைச்சர் தெரிவிக்கையில், தேசிய விவசாயிகளுக்கு பாதிப்பு ஏற்படுத்தும் எந்த நடவடிக்கைக்கும் ஒத்துழைப்புகளுக்கும் இணக்கம் தெரிவிக்கப்பட மாட்டாது என தெரிவித்துள்ளார்.

உலக வர்த்தக அமைச்சர்களின் மாநாட்டில் மேற்கொள்ளப்பட உள்ள இந்த ஒப்பந்தங்களில் கையெழுத்திடப்படும் பட்சத்தில் கல்வி,சுகாதாரம்,தபால், நீர், போக்குவரத்து, போன்ற சேவைகள் அந்தந்த நாடுகளில் தனியார் மயமாக்கப்படு வது தவிர்க்க முடியாது போகலாம்.

இந்த நிலையில் இந்த சேவைகள் தொடர்பான தீர்மானங்களை எடுப்பதில், சிக்கல்கள் ஏற்படலாம் என உலக வர்த்தக அமைப்பின் அழுத்தங்களை தவிர்க்கும் தேசிய அமைப்பு தெரிவித்துள்ளது. (32)

# மட்டக்களப்பில் கடற்படை முகாம் பா.உறுப்பினர் தங்கேஸ்வரி கண்டனம்

மட்டக்களப்பில் சிறிலங்கா கடற்படை முகாம் அமைக்கப்படுவது யுத்த தயாரிப்புக்களின் ஒரு நடவடிக்கைதான் என்று தமிழ் தேசியக் கூட்டமைப்பின் மட்டக் களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் தங்கேஸ்வரி கதிர்காமன் குற்றம் சாட்டியுள்ளார்.

சிறிலங்கா பாராளுமன்றில் அவர் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை பேசியதாவது;

முப்படைகளின் தளபதி தயா சந்தகிரி விரைவில் யுத்தம் வரக்கூடும் என்று அறிவித்துள்ளார். இது அரசாங்கத்தின் கருத்தையே எதிரொலிப்பதாகவுள்ளது. மட்டக்களப் பில் புதிய கடற்படை முகாம் அமைப்பதும் அரசாங்கம் யுத்தத்தைத் தூண்டுகிற செயலாகத்ததான் உள்ளது.

யுத்தத்தைத் தூண்டுகிற அர சாங்கத்தால் எப்படி எட்டு வீதமான பொருளாதார வளர்ச்சியை உருவாக்க முடியும்?

வடக்கு- கிழக்கில் சிறிலங்கா இராணுவ ஆக்கிரமிப்புப் பிரதேசத்தில் நாளாந்தம் வன்முறைச் சம்பவங்கள் நடைபெறுகின்றன கிழக்குப் பிரதேசத்தில் அதி உயர் பாதுகாப்பு வலயத்தினால் மீன்பிடித் தொழில் நசிந்து போய் விட்டது. கிழக்குப் பிரதேசத்தில் ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களை சிறிலங்கா அரசாங்கம் புறக்கணிக்கிறது என்றார் தங்கேஸ்வரி.

## சிப்பாய் காயம்!

மட்டக்களப்பு மாவட்டத்தின் ஓட்டமாவடி பிரதேசத்தில் நேற்று முன் தினம் இராணுவம் மற்றும் பொலிஸ் சோதனைச் சாவடிகள் இரண்டின் மீது இனந்தெரியாதோர் மேற்கொண்ட கைக்குண்டுத் தாக்குதலில் ஒரு பொலிசார் காயமடைந்ததாக தெரிவிக்கப்படுகிறது. (32)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை
## பட்டப்பின் கல்வி டிப்ளோமா அனுமதிப் பரீட்சை-2005

வவுனியா வளாகத்தில் மேற்படி கற்கைநெறிக்கு விண்ணப்பித்த யாழ். மாவட்டத்தை நிரந்தர விலாசமாகக் கொண்ட விண்ணப்பதாரிகள் தவிர்ந்த பிற மாவட்ட விண்ணப்பதாரிகள் அனுமதிப்பரீட்சையினை வவுனியா வளாகத்திலும் 17.12.2005 (சனிக்கிழமை) அன்று தோற்றுவதற்கு ஏற்பாடுகள் மேற் கொள்ளப்பட்டுள்ளன.

பதிவாளர் (சி.13559)

## முக்கிய அறிவித்தல்

அன்புடையீர்!

30.06.2005 இற்கு முன்னர் புதுக்குடியிருப்பில் அமைந்துள்ள தென்றல் இலத்திரனியல் திருத்தகத்தில் திருத்தத்திற்காக பொருட்களை வழங்கியவர்கள் உரிய ஆதாரம் காட்டி எதிர்வரும் 24.12.2005 இற்கு முன்னர் மீளப் பெற்றுக்கொள் ளுமாறு அன்புடன் அறியத்தருகின்றோம்.

**குறிப்பு:-** இவ் அறிவுறுத்தலுக்கமைய மீளப் பெற்றுக் கொள்ளப் படாத பொருட்களுக்கு நாம் பொறுப்பாளிகள் அல்ல.

*நிர்வாகம்.*
*"தென்றல் இலத்திரனியலகம்"*
*இரணைப்பாலை வீதி.*
*புதுக்குடியிருப்பு*

(7088)

# சாவு அறிவித்தல்



## ஜோஜ் வாசிங்ரன் மரிய கொறற்றி

செம்பியன்பற்று வடக்கை பிறப்பிடமாகவும் சொந்த வசிப்பிடமாகவும் கொண்ட ஜோஜ்வாசிங்ரன்-மரியகொறற்றி அவர்கள் 14.12.2005 புதன்கிழமை காலமானார். இவர் ஜோஜ்வாசிங்ரனின் அன்பு மனைவியும், சுலக்சனா பேபியின் (முன்பள்ளி ஆசிரியை) அன்புத் தாயாரும், ஸ்ரனிஸ் லோஸ், மேரிபற்றிமா ஆகியோரின் அன்பு மகளும், காலஞ்சென்ற மரியாம்பிள்ளை, வரோனிக்கம்மா ஆகியோரின் மருமகளும், யூட்சின் (சுவிஸ்), மேவின் (சுவிஸ்), ஜொய்சி, லின்ரா, சோபா ஆகியோரின் அன்புச் சகோதரியும், சிறிஸ்கந்தராசாவின் மாமியாரும், செல்வன் (இத்தாலி), யுஸ்திக்(சுவிஸ்), சிறி (சுவிஸ்), சந்திரன்(இத்தாலி), அப்பன் ஆகியோரின் மைத்துனியும் ஆவார். அன்னாரின் நல்லடக்கம் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

தகவல்:-
கணவர் ஜோஜ்

(7094)

## நீங்காத நினைவலையில் ஓராண்டு



தோற்றம் 03 - 05 - 1978

மறைவு 26 - 12 - 2004

## தங்கரூபன் ராஜினி

திதி:- 15.12.2005

எம் அன்பின் தெய்வமே ஆசையாய் அன்பு மழை பொழிந்திட்ட -
அம்மாவே
காலனவன் சுனாமி வடிவெடுத்து- எமை
தவிக்கவிட்டு அழைத்தானோ-உனை
காலங்கள் கனவாய் கலைந்தனவோ
மாதங்கள் ஈராறு மறைந்தனவோ
அன்னை முகம் காண துடிக்கின்றது-குழந்தை
விண்ணுலகம் சென்றாலும் விடிவிளக்காய் ஒளி வீசி மீண்டும்
மண்ணில் வருவீரா வழிமேல் விழிவைத்து பார்த்திருக்கின்றோம்.
ஆண்டுகள் பல சென்றாலும்-உங்கள் நினைவுகளுடன் நாம்............
உங்கள் ஆத்மா சாந்தியடைய தினம் தினம் இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

என்றும் உங்கள் நினைவுகளுடன் வாழும்
அன்புக்கணவன் த.ரூபன்
பாசமகள் த.நிலா

முகவரி:-
உடுத்துறை வடக்கு,
உடுத்துறை

(7085)

## ஓராம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 01 - 12 - 1958



மறைவு 27 - 12 - 2004

அமரர்
## மௌனகுரு- செல்வகுரு
(செல்லாண்டி)

(பிரபல வர்த்தகர்களில் ஒருவரான மௌன குரு கமலா தேவியின் மகன் )

தொண்டு செய்வதற்கே வள்ளலாக வாழ்ந்து காட்டிய எங்கள் அன்புத் தெய்வம் இறைபாதம் சேர்ந்து விட்டது. எமது அன்புத் தெய்வத்தின் இழப்பின் போது எங்களுடன் பங்கு கொண்ட அனைவருக்கும் நன்றி கூறுகின்றோம் அத்தோடு 16.12.2005 ஆம் திகதி வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையில் கலந்து கொண்டு மதிய போசனத்திலும் பங்கு கொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

மனைவி செல்வகுரு துரா மற்றும் குடும்பத்தினர்
"கமலகிரி இல்லம்" நெடியகாடு
வல்வெட்டித்துறை

(7086)

# நிலநடுக்கம்

(புதுடில்லி)

புதுடில்லி, உத்தராஞ்சல் மற்றும் பத்திரிநாத் பகுதிகளில் நேற்று நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. நிலநடுக்கம் ரிச்டர் அளவில் 5.2 புள்ளிகளாக பதிவாகியுள்ளது. சேதம் குறித்த தகவல்கள் எதுவும் வெளியாகவில்லை.

## சேலம் விபத்தில் மூன்று குழந்தைகள் பலி

(சேலம்)

சேலத்தில் நடந்த தீ விபத்தில் மூன்று குழந்தைகள் பலியானார்கள். மேலும் இரண்டு பேர் காயமடைந்துள்ளனர். கார்த்திகை தீப திருநாளை முன்னிட்டு ஏற்றப்பட்ட விளக்கை மண்ணெண்ணெய் தாங்கி மீது வைத்ததால், இத் தீ விபத்து நிகழ்ந்துள்ளது. காயமடைந்த இரண்டு பேர் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

## ஆறு தீவிரவாதிகள் காஷ்மீரில் சுட்டுக்கொலை

(ஸ்ரீநகர்)

காஷ்மீரில் பட்காம் மாவட்டத்தில் நேற்று படையினருக்கும், தீவிரவாதிகளுக்கும் இடையே நடந்த துப்பாக்கிச் சண்டையில் ஆறு தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர். படையினர் பட்காம் மாவட்டத்தில் தேடுதல் வேட்டை நடத்திய போது தீவிரவாதிகள் படையினரை நோக்கி துப்பாக்கிச் சூடு நடத்தினர். படையினர் பதில் தாக்குதல் நடத்தியதில் தீவிரவாதிகள் கொல்லப்பட்டதாக படைத்தரப்புக்கள் தெரிவித்துள்ளன.

## நீதிபதி மீது வழக்கு

(புதுடில்லி)

செல்லுபடியாகாத இலவசப் புகையிரத அனுமதியட்டையை பயன்படுத்தி பயணம் செய்ததற்காக அலகாபாத் நீதிமன்ற ஓய்வு பெற்ற நீதிபதி மீது புகையிரத பாதுகாப்பு படையினர் வழக்குப் பதிவு செய்துள்ளனர்.

பிரயாக்ராஜ் புகையிரதத்தில் நேற்று முன்தினம் பயணம் செய்த ஓய்வு பெற்ற நீதிபதி ஆர்.கே சுக்லா முறையான பயணச் சீட்டின்றி இருந்தது கண்டு பிடிக்கப்பட்டது. புகையிரத நிர்வாகத்தை மோசடி செய்ததற்காக அவர் மீது குற்றம் சாட்டப்பட்டு அவரிடம் அபராத தொகை பெற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## சென்னை-மங்களூர் புகையிரதத்தில் வெடி குண்டுகள் மீட்பு

(சென்னை)

சென்னையில் இருந்து மங்களூர் சென்ற புகையிரதத்தில் இருந்து வெடி குண்டுகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. இது தொடர்பாக தெரியவருகையில், பாதுகாப்புப் படைப் பொலிசார் புகையிரதத்தை சோதனை செய்த போது தூங்கும் வசதியுள்ள பெட்டியில் கூடை ஒன்று கிடந்ததாகவும் அந்தக் கூடைக்கு யாரும் சொந்தம் கொண்டாட வராததால் பொலிசாருக்கு சந்தேகம் ஏற்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதனையடுத்து கூடையை பொலிசார் திறந்து பார்த்தபோது அதில் வெடி குண்டு, ஜெலிக்னைட் குச்சிகள் இருப்பது தெரிய வந்தது. உடனே பொலிசார் பயணிகளை நிலையத்தை விட்டு வெளியேற்றினார்கள்.

மங்களூர் மாவட்ட பொலிசார் வெடிகுண்டு அடங்கிய பெட்டியை பத்திரமாக பொலிஸ் பயிற்சி மைதானத்திக்கு கொண்டு சென்று வெடிகுண்டுகளை செயல் இழக்கச் செய்தனர்.

வெடிகுண்டை தீவிரவாதிகள் கடத்தி வந்திருக்கலாமென பொலிசார் சந்தேகிக்கிறார்கள். பொலிசாரின் நடமாட்டமும் கண்காணிப்பும் தீவிரமாக இருந்தால் கைவிட்டு சென்றிருக்கலாமெனவும் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

# இந்திய- பங்களாதேஷ் எல்லையில் மின்வேலி அமைக்கும் திட்டம் இல்லை

-இந்திய மத்திய உள்துறை இணையமைச்சர்

இந்திய- பங்களாதேஷ் எல்லையில் மின்வேலி அமைக்கும் திட்டம் இல்லை என்று இந்திய மத்திய உள்துறை இணைஅமைச்சர் ரகுபதி தெரிவித்துள்ளார். மேற்குவங்க மாநிலத்தில் இந்திய- பங்களதேஷ் எல்லைப்பகுதியில் 277கிலோ மீற்றர் தூரத்துக்கு விளக்குகள் அமைக்கும் பணிக்கு மத்திய அரசு ஏற்கனவே ஒப்புதல் வழங்கியுள்ளது. இதில் 117 கிலோ மீற்றர் தூரத்திற்கு விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளன. மீதிப் பணியும் விரைவாக நடந்து வருகிறது. இந்திய- பங்களாதேஷ் எல்லையில் மின்வேலி அமைக்கும் திட்டம் எதுவும் அரசிடம் இல்லை. பங்களாதேஷிலிருந்து இந்தியாவுக்குள் ஊடுருவலை தடுக்க 24 மணி நேரமும் ரோந்து. கண்காணிப்பு சாவடிகள் போன்ற பல நடவடிக்கைகள் எடுக்கப் பட்டுள்ளன என அவர் தெரிவித்தார்.


## பதவி வெற்றிடம்

சேவாலங்கா நிறுவனத்தின் கிளிநொச்சி சுனாமி அலுவலகத்தினால் முல்லைத்தீவு, மருதங்கேணி, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் வீடமைப்பு திட்டங்களில் கடமை புரிய பின்வரும் பதவிகளிற்கான விண்ணப்பங்கள் உடனடியாக கோரப்படுகின்றது.

01)தொழில் நுட்ப உத்தியோகத்தர்

தகைமை:- 1) N.C.T அல்லது அதற்கு சமமான கட்டட நிர்மாண தொழில் நுட்ப கல்வி
2) 02 வருட தொழில் சார் அனுபவம்

02) வேலை மேற்பார்வையாளர்

தகைமை- 1) க.பொ.த பத்திரம், (உயர்தரம்)
2) 02 வருட தொழில் சார் அனுபவம்

விண்ணப்பங்கள் நேரடியாகவோ, பக்ஸ் மூலமாகவோ, கடித மூலமாகவோ அனுப்ப வேண்டிய முகவரி:-

பொறியியற் பிரிவு,
சேவாலங்கா மன்றம்,
சுனாமி காரியாலயம்,
இல:- 72, திருநகர்,
கிளிநொச்சி.
Fax No:- 021 2283957

விண்ணப்பங்கள் சேர வேண்டிய இறுதித் திகதி :- 21.12.2005
(சி.13562)



## சுனாமி வீட்டு வேலைத்திட்டம்-முல்லைத்தீவு , மருதங்கேணி, பருத்தித்துறை

கட்டட ஒப்பந்தகாரர்களிடமிருந்து சகல விதமான வேலைகளுக்கும் (கூரை, கதவு, யன்னல் உட்பட) கூலி விபரங்கள் கோரப்படுகின்றன வேலைக்கான பொருட்கள் எமது நிறுவனத்தால் வழங்கப்படும்.

விண்ணப்பிக்க வேண்டிய முகவரி:-
பொறியியற் பிரிவு,
சேவாலங்கா மன்றம் (சுனாமி அலுவலகம்)
இல-72,
திருநகர்,
கிளிநொச்சி (சி.13563)



## 31 நாள் நினைவஞ்சலி

### கந்தர் ஆறுமுகம்

துணுக்காய் கோட்டக்கல்வி பணிப்பாளர் திரு. ஆ. சுந்தரமூர்த்தி அவர்களின் தந்தை அமரர் கந்தர் ஆறுமுகம் அவர்களின் 31 நாள் நினைவு நாளில் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்

தகவல்:-
கல்லூரி சமூகம்,
மு/மல்லாவி மத்தியகல்லூரி
யோகபுரம்
(6017)



## முல்லை. மாவட்ட நுண்கலைக்கல்லூரி செயற்படுத்தும் மார்கழி மாத நுண்கலை அரங்கு

இடம்:- முள்ளியவளை நுண்கலைக்கல்லூரி கேட்போர் கூடம்

காலம்:- 21.12.2005 (புதன் கிழமை)

மாலை:- 4.00 மணி

மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளுடன் சிறப்பு இசையரங்கமாக சங்கீத கலாவித்தகர் திரு. சி சிவசத்தியமோகன் அவர்களின் தமிழிசை அரங்கு கலை ஆர்வலர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

(சி.13560)


# சேதுகால்வாய் தொடர்பாக இந்தியா-எகிப்து ஒப்பந்தம்

(புதுடில்லி)

சேதுகால்வாய் தொடர்பாக இந்தியா எகிப்து இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் இம்மாதம் 17ஆம் திகதி சென்னையில் தி.மு.க. தலைவர் கருணாநிதி முன்னிலையில் கையெழுத்தாகவுள் ளது.

உலக கடல்சார் வாணிபத்தின் உயிர்நாடியாக கருதப்படும் சுயஸ்கால்வாயின் பராமரிப்பு, நிர்வாகம் ஆழப்படுத்தும் பணியில் எகிப்துக்கு அனுபவம் உள்ளது. எகிப்து நாட்டின் அனுபவம் சேது சமுத்திர கால்வாய் திட்டத்திற்கும் கிடைக்கும் வகையில் சேதுசமுத்திர கழகமும் சுயஸ் கால்வாய் ஆணையக்குழுவும் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யவுள்ளன.

புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடும் நிகழ்ச்சிக்கு தி.மு.க. தலைவர் கருணாநிதி முன்னிலை வகிக்கிறார். மத்திய கப்பல் சாலைப்போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் டி-ஆர்பாலு தலைமை தாங்குகிறார்.

சேதுசமுத்திரத் திட்டப் பணிகளில் கால்வாயை ஆழப் படுத்துவதற்கான பணியின் ஒரு பகுதி இந்திய அகழ்வுக் கழகத்திடம் ஒப்படைக்கப் பட்டது. இந்தக் கழகம் இதுவரை 25 இலட்சத்து 18 ஆயி ரத்து 526 கன மீற்றர் அளவிற்கு மணல் மற்றும் கடல் அடியில் காணப்பட்ட பொருட்களை அப்புறப்படுத்தியுள்ளது. என்பது குறிப் பிடத்தக்கது.

## இந்திய பிரதமர்- யப்பான் பிரதமர் பல்வேறு விடயங்கள் குறித்து பேச்சு

ஆசியன் உச்சி மாநாட்டில் சிறப்பு விருந்தினராக பங்கேற்க கோலாலம்பூர் சென்றிருக்கும் இந்தியப்பிரதமர் மன்மோகன்சிங் யப்பான் பிரதமர் யுனிசுரோ கொய்சுமியை நேற்று முன்தினம்சந்தித்துப் பேசினார்.

கப்பல் போக்குவரத்து பாது காப்பு ஒத்துழைப்பு போன்ற பல் வேறு அம்சங்கள் தொடர்பாக அவர் விரிவாக விவாதம் நடத்தினார்


BOC
இலங்கை வங்கி

பகிரங்க ஏல விற்பனை பற்றிய

## அறிவித்தல்

நாம் ஏற்கனவே விளம்பரப்படுத்திய படி 30.11.2004 திகதி வரை அடகு வைக்கப்பட்டு மீட்கப்படாத நகைகளின் ஏல விற்பனை 10.12.2005 மற்றும் 11.12.2005 ஆகிய திகதிகளில் இலங்கை வங்கி யாழ். மேற்தரக் கிளையில் நடைபெற்றது.

இவ் ஏல விற்பனையின் தொடர்ச்சி எதிர் வரும் 17.12.2005 சனிக்கிழமையும் காலை 9.00 மணிமுதல் நடைபெறும்

இடம்:- யாழ். மேற்தரக் கிளை, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்

உதவிப் பொது முகாமையாளர்,
(வட பிராந்தியம்- யாழ்ப்பாணம்)
(சி.13561)



## 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

*"சமாதானத்தில் இளைப்பாறக்கடவது"*

மலர்வு 21 - 02 - 1935



உதிர்வு 16 - 12 - 2004

அமரர்
கி.மடுத்தீனா (பொன்னு)
(ஓய்வு பெற்ற உபதபால் அதிபர்)

எங்கள் அன்புத் தெய்வமாய், குடும்பத்தின் நாயகியாய் , நல்லதோர் வழிகாட்டியாய், வாழ்வூட்டி பண்பும் பாசமும், நேசமும் மிக்கதோர் குலவிளக்காய் திகழ்ந்து, எம்மையெல்லாம் வளமாய் உயர்வாழ்வெய்திட வகை செய்த தெய்வமே நீங்கள் எம்மையெல்லாம் மீளாத்துயரில் ஆழ்த்திவிட்டு அமரராகி ஓராண்டு கழிந்து விட்டாலும் எங்கள் உயிரிலும் உள்ளங்களிலும் இல்லங்களிலும் நீங்காத நினைவாய், உருவாய் என்றென்றும் நின்று நிலைத்து தொடரும் துணையாய் விளங்கும் உங்களின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்.

இவரின் ஆத்மசாந்திக்காக பாலையடிப்புதுக்குளம் புனித செபமாலை மாதா ஆலயத்தில் 16.12.2005 வெள்ளிக்கிழமை மாலை 4.00 மணிக்கு நடைபெறும் இரங்கல் திருப்பலியில் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

நீங்காத நினைவுடன்,
அருமைக் கணவர் அன்பு மகள்மார், மருமகன்மார் , பேரப்பிள்ளைகள்.

ஆலங்குளம் வட்டக்கண்டல்

(சி.13497)

## அகமதாபாத் டெஸ்ட் போட்டி கங்குலியின் வாய்ப்புப் பறிப்பு



சிறிலங்காவுக்கு எதிரான மூன்றாவதும் இறுதியுமான டெஸ்ட் போட்டிக்கான 15 பேர் கொண்ட இந்திய அணியிலிருந்து முன்னாள் அணித் தலைவர் கங்குலி நீக்கப்பட்டுள்ளார்.

இவரின் இடத்துக்கு துடுப்பாட்ட வீரர் வசிம் ஜப்பார் அணிக்கு அழைக்கப்பட் டுள்ளார். இவர் 2000/02ஆம் ஆண்டு காலப் பகுதியில் இந்திய அணிக்காக ஏழு டெஸ்ட் போட்டியில் கலந்து கொண்டதாக தெரிவிக்கப்படுகிறது.

மத்திய தர துடுப்பாட்ட வீரர்களான யுவராஜ்சிங், கைப் ஆகியோர் அணியில் இடம்பிடிப்பது அவசியமாக உள்ளதால் கங்குலிக்கு இடமளிக்க முடியாத நிலை இருப்பதாக இந்திய கிரிக்கெட் தெரிவுக் குழு தலைவர் கிரேன் மோரே தெரிவித்துள்ளார்.

டில்லியில் நடைபெற்ற இரண்டாவது டெஸ்ட் போட்டியில் கங்குலி 40, 39 ஓட்டங்களைப் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

## தொடக்க வீரராக ஆடுவதில் சிரமம் எதுவும் இல்லை



சேவாக் ஆடாததால் ஆரம்ப வீரராக விளையாட எனக்கு வாய்ப்புக் கிடைத்தது. தொடக்க ஆட்டக்காரராக களம் இறங்குவது குறித்து பயிற்சியாளர் சப்பலும், தலைவர் ராவிட்டும் என்னிடம் கூறினார்கள்.அதற்கு ஏற்றபடி என்னைத் தயார்படுத்திக்கொண்டேன் எனத் தெரிவிக்கிறார் சகலதுறை வீரர் இர்பான் பதான்.

அவர்கள் என்னிடம் கூறும்போது, இது ஒரு நாள் போட்டி அல்ல. டெஸ்ட் போட்டி. அதனால் இயல்பாக ஆடினால் போதும் என்றார். தொடக்க ஆட்டக்காரராக களம் இறங்குவதில் சிரமம் ஒன்றும் இல்லை.

ஒரு ஆட்டத்தில் ஓட்டம் குவிப்பதால் சகல துறை வீரர் ஆகிவிட முடியாது. பத்திரிகைகள் தான் என்னை சகலதுறை வீரர் எனப் புகழ்கின்றன. அந்த நிலையை எட்டுவதற்கு இன்னும் ஒன்றிரண்டு ஆண்டுகள் ஆகும்.

துடுப்பாட்டம் மற்றும் பந்து வீச்சில் தொடக்க ஆட்டக்காரராக செயற்படுவது வித்தியாசமாக உள்ளது. துடுப்பாட்டம் செய்யும்போது டெண்டுல்கர் நிறைய ஆலோசனைகள் வழங்கினார். அவர் என்னுடைய ஆட்டங்களை நன்கு தெரிந்தவர். இங்கிலாந்தில் கவுண்டி கழகத்தில் விளையாடியதும் துடுப்பாட்டத்தில் ஓட்டம் குவிப்பதற்கு பலமாக இருந்தது என்றார்.

இலங்கைக்கு எதிரான இரண்டாவது டெஸ்டில் மூன்றாவது நாள் ஆட்டத்தில் சகலதுறை வீரராக வளர்ந்துவரும் பதான் அதிரடியாக ஆடி ஓட்டம் குவித்தார். சேவாக் இல்லாத குறையை அவர் நிறைவு செய்தார்.

அவர் 140 பந்துகளில் 10 பவுண்டரி, இரண்டு சிக்சர்களுடன் 93 ஓட்டம் குவித்தார். தனது முதல் சதத்தை அடிப்பார் என எதிர்பார்த்த நிலையில் அதிர்ச்சி அளிக்கும் வகையில் ஆட்டமிழந்தமை குறிப்பிடத்தக்கது.

## கலகக்காரர்களின் விளையாட்டாக கிரிக்கெட்டை மாற்றாதீர்கள்




கிரிக்கெட்டை கலகக்காரர்களின் விளையாட்டாக மாற்றாதீர்கள் என வீரர்களுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார் சர்வதேச கிரிக்கெட் சபைத் தலைவர் ஈசான் மணி.

இங்கிலாந்து - பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான இரண்டாவது ஒரு நாள் கிரிக்கெட் போட்டி லாகூரில் திங்கட்கிழமை நடைபெற்றது. அந்த ஆட்டத்தைக் காணவந்த மணி நிருபர்களிடம் கூறியதாவது,

சர்வதேச போட்டிகளின்போது வீரர்கள் வாக்குவாதத்தில் ஈடுபடுவது குறித்து அதிகமான குற்றச்சாட்டுக்கள் வந்துள்ளன. அதைத் தவிர்ப்பதற்கு சர்வதேச கிரிக்கெட் சபை முயற்சி மேற்கொண்டு வருகிறது. நான் அம்மாதிரியான வீரர்களிடம் கேட்டுக்கொள்வதெல்லாம் கலகக்காரர்களின் ஆட்டமாக கிரிக்கெட்டை மாற்றிவிடாதீர்கள் என்பதுதான்.

நடுவர்களுடனோ, வீரர்களுடனோ வாக்குவாதத்தில் ஈடுபடுவதைத் தவிர்ப்பதற்காக 2001ஆம் ஆண்டு நெறிமுறை வகுக்கப்பட்டது. களத்தில் மட்டுமல்லாது அதற்கு வெளியிலும் அம்மாதிரியான செயல்களில் ஈடுபடுவோரை இடை நீக்கம் செய்வதுடன் அபராதமும் விதிக்கப்பட்டு வருகிறது.

கிரிக்கெட் விளையாட்டு, அதன் மகத்துவத்துடன் விறுவிறுப்புடன் விளையாடும் ஆட்டமாக இருக்க வேண்டும் என்பதுதான் ஐ.சி.சி.யின் லட்சியம் என்றார் மணி.

## பாக். ஒரு நாள் போட்டியிலிருந்து பீற்றர்சனும் விலகினார்



வின எலும்பில் ஏற்பட்ட காயம் காரணமாக பாகிஸ்தான் சுற்றுத் தொடரிலிருந்து இங்கிலாந்து வீரர் கெவின் பீற்றர்சன் விலகிக் கொண்டுள்ளார். இதனால், ஏனைய மூன்று ஒரு நாள் போட்டிகளிலும் அவர் பங்கேற்க முடியாது எனத் தெரிவிக்கப்படுகிறது.

25 வயதான பீற்றர்சன் காயம் காரணமாக பயிற்சிப் போட்டிகளிலும் முன்னைய ஒரு நாள் போட்டிகள் இரண்டிலும் ஆடுவதற்கு மிக சிரமமடைந்தார்.

காயம் காரணமாக டெஸ்ட் தொடரின்போது மைக்கல் வோகனும் ஒரு நாள் தொடருக்கு முன்பு கைல்ஸ் ஆகியோரும் இங்கிலாந்து சென்றமை குறிப்பிடத்தக்கது. வோகன் இல்லாதது இங்கிலாந்தின் வீழ்ச்சிக்கு காரணமாக அமைகின்ற நிலையில் தற்போது பீற்றர்சனும் விலகிச் செல்வது இங்கிலாந்து அணிக்குப் பெரும் நெருக்கடியாகியுள்ளது.

இது தொடர்பாக பீற்றர்சன் தெரிவிக்கும்போது தனக்கு மிகுந்த ஏமாற்றத்தையளிப்பதாகக் கூறியதுடன் இந்த நிலையில் தனது சகாக்களை விட்டுப்போவது தவிர்க்க முடியாதது என்றும் கூறியுள்ளார்.

எவ்வாறேனும் மார்ச்சில் ஆரம்பமாகவுள்ள இந்தியாவுடனான தொடரில் தான் பங்கேற்கும் நம்பிக்கை உண்டு என்பதை அவர் உறுதிப்படுத்தியுள்ளார். இவரின் இடத்துக்கு இதுவரை எந்த மாற்று வீரரும் அழைக்கப்படவில்லை.

# கும்ளே, ஹர்பஜன்சிங் சிறப்புப் பந்து வீச்சு டில்லியில் இந்தியாவுக்கு 188 ஓட்ட வெற்றி

### ஆட்டநாயகனானார் கும்ளே



இந்திய - சிறிலங்கா அணிகளுக்கிடையில் டில்லியில் நடைபெற்ற இரண்டாவது டெஸ்ட் போட்டியில் இந்திய அணி 188 ஓட்டங்களால் வெற்றிபெற்றது. 436 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் தனது இரண்டாவது இனிங்சை ஆடிய சிறிலங்கா 91.2 ஓவரில் 247 ஓட்டங்களைப் பெற்று அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது.

நான்காம் நாளான நேற்று முன்தினம் பந்து வீச்சில் ஆதிக்கம் செலுத்திய கும்ளே, ஹர்பஜன்சிங் ஆகியோர் இறுதி நாளான நேற்றும் ஆதிக்கம் செலுத்தி இந்திய அணியின் வெற்றியை பிரகாசமாக்கினர்.

கும்ளே நான்கு விக்கெட்டுக்களையும், ஹர்பஜன்சிங் மூன்று விக்கெட்டுக் களையும் கைப்பற்றினர். அகக்கர் இரண்டு விக்கெட்டுக்களை கைப்பற்றினார்.

கும்ளே சமிந்த வாசின் விக்கெட்டை கைப்பற்றியபோது ஒரு டெஸ்ட் போட்டியில் எட்டாவது தடவையாக பத்து விக்கெட்டுக்களைக் கைப்பற்றியவர் என்ற பெருமையைப் பெற்றார். அத்துடன் இப்போட்டியில் சொந்த மண்ணில் 300 விக்கெட்டுக்களை கைப்பற்றியவர் என்ற பெருமையைப் பெற்றதுடன் Caught and Bowld முறையில் 25 முறை ஆட்டமிழப்புச் செய்த முரளியின் சாதனையை கும்ளே சமன் செய்தார். சிறிலங்கா துடுப்பாட்டத்தில் அத்தப்பத்து 67, ஜெயவர்த்தன 67, சங்கக்கார 33, டில்சான் 32 ஓட்டங்களை அதிக பட்சமாகப் பெற்றனர்.

போட்டியின் ஆட்ட நாயகனாக கும்ளே தெரிவானார். மூன்றாவதும், இறுதியுமான போட்டி எதிர்வரும் 18ஆம் திகதி அகமதாபாத்தில் நடைபெறவுள்ளது.

இந்தியா முதல் இனிங்ஸ் 280, இரண்டாவது இனிங்ஸ் 376/ 6 விக்கெட், சிறிலங்கா முதல் இனிங்ஸ் 230 ஓட்டம்.



டில்லி டெஸ்ட் போட்டியில் 188 ஓட்டங்களால் வெற்றி பெற்ற இந்திய அணி வீரர்கள் மைதானத்தை விட்டு மகிழ்ச்சியுடன் வெளியேறும் காட்சி.



## மேற்கு அவுஸ்திரேலியாவுடன் பயிற்சி ஆட்டம் தென்னாபிரிக்க வீரர் இரட்டைச் சதம்

மேற்கு அவுஸ்திரேலிய அணிக்கு எதிரான பயிற்சி கிரிக்கெட் போட்டியின் இரண்டாவது இனிங்சில் தென்னாபிரிக்க வீரர் ருடெல்ப் இரட்டைச் சதம் அடித்துள்ளார்.

தென்னாபிரிக்க கிரிக்கெட் அணி அவுஸ்திரேலியாவில் பயணம் செய்து விளையாடி வருகிறது. இந்நிலையில் தென்னாபிரிக்க - மேற்கு அவுஸ்திரேலிய அணிகள் இடையில் மூன்று நாள் கொண்ட பயிற்சி ஆட்டம் பேர்த்தில் நடைபெற்றது.

இதன் முதல் இனிங்சை தென்னாபிரிக்கா அணி 292 ஓட்டம் எடுத்தது. பின்னர் முதல் இனிங்சில் ஆடிய மேற்கு அவுஸ்திரேலிய அணி ஐந்து விக்கெட் இழப்பிற்கு 300 ஓட்டம் அடித்து ஆட்டத்தை நிறுத்தியது. எட்டு ஓட்டங்கள் பின் தங்கிய நிலையில் இரண்டாவது இனிங்சை ஆடிய தென்னாபிரிக்க அணி சிறப்பாக ஆடி ஓட்டம் சேர்த்தது. அந்த அணி ஒன்பது விக்கெட் இழப்பிற்கு 395 ஓட்டம் குவித்து ஆட்டத்தை நிறுத்தியது. அற்புதமாக ஆடிய அந்த அணி வீரர் ருடெல்ப் இரட்டைச் சதம் அடித்தார். அவர் 201 ஓட்டம் எடுத்து இறுதி வரை ஆட்டமிழக்காது களத்தில் இருந்தார்.



இதேவேளை, அவுஸ்திரேலிய, தென்னாபிரிக்க அணிகளுக்கிடையிலான முதலாவது டெஸ்ட் போட்டி நாளை ஆரம்பமாக வுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஊக்கமருந்து உட்கொண்ட குற்றச்சாட்டில் அமெரிக்க குறுந்தூர வீரர்களுக்குத் தடை





அமெரிக்காவின் இரண்டு குறுந்தூர ஓட்ட வீரர்களான டிம் மொண்ட் கொமரி, கிறிஸ்டி டெய்லைல் ஆகியோர் ஊக்க மருந்து பாவித்த குற்றத்துக்காக போட்டிகளில் பங்கேற்கத் தடை விதிக்கப்பட்டுள்ளனர். அமெரிக்க ஊக்கத் தடுப்பு முகவர் மையம் இந்தத் தடையுத்தரவை வழங்கியதுடன் இவ்விருவரும் 2001ஆம் ஆண்டு முதல் சாதனை விருதுகளும் ஏனைய பெற்ற விருதுகளும், சான்றிதழ்களும் செல்லுபடியற்றவையாகவும் பிரகடனம் செய்துள்ளது.

எனினும், இருவரும் செய்த மேன்முறையிட்டையடுத்து இத்தண்டனையை அரைவாசியாகக் குறைக்க விளையாட்டுத்துறை நீதிமன்று தீர்மானித்துள்ளது. எனினும், மொண்ட் கொமரியினது பயிற்றுநர் தடைக்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளதுடன் இதன் காரணமாகவே அவர் போட்டிகளிலிருந்து ஓய்வுபெறலாம் என்றும் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கும்போது மொண்ட் கொமரி இதனை செய்திருக்க முடியாது என்றும் அவருக்கு தடை விதிக்கப்படாவிட்டால் 2007ஆம் ஆண்டு போட்டிகளில் பங்கேற்க முடியும் என்று கூறினார். ஆயினும், சர்வதேச மெய்வல்லுனர் சங்க அதிகாரி லெளமன் டயக் நீதிமன்றத்தின் தீர்ப்பு ஒரு மைல்கல் என்றும் தெரிவித்துள்ளார்.

## சிந்தனைக்கு



எமது சொந்தப்பலத்தில் நாம் வேரூன்றி நிற்பதால், மற்றவர்களின் அழுத்தங்களுக்குப் பணிந்துகொடாமல் எம்மால் தலை நிமிர்ந்து நிற்க முடிகின்றது.

தமிழீழ தேசியத் தலைவர்.


ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 15.12.2005
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் natham23 ela@ yahoo.com


# சமாதானத்திற்கான வாய்ப்புக்கள் அடைப்பு!

சிறிலங்கா ஆட்சியாளர்கள் சமாதானத்திற்கும், அமைதிக்கும் வாய்ப்பாக எஞ்சியுள்ள ஓட்டைகளையும் அடைக்க முற்பட்டுள்ளனர். இந்த வகையில் வெளிநாட்டு இராஜதந்திரிகள்/ பிரதிநிதிகள் விடுதலைப்புலிகளைச் சந்திப்பதற்கு அனுமதி வழங்குவதில்லை என்ற தீர்மானமும், விடுதலைப்புலிகளுடன் இராணுவத்தளபதிகள் மட்டத்தில் தொடர்புகளை வைத்துக்கொள்ளக்கூடாது என்ற முடிவும் இறுதியானவையாகும்.

வெளிநாட்டு இராஜதந்திரிகள் / பிரதிநிதிகள் விடுதலைப்புலிகளைச் சந்தித்துப் பேசுவது விடுதலைப்புலிகளின் அந்தஸ்தை உயர்த்திவிடும் என்பதே சிறிலங்கா ஆட்சியாளர்களின் கணிப்பாகும். முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரின் 'சிந்தனை' இது எனவும் கூறப்படுகிறது.

இதனை அடியொற்றியதான நடவடிக்கையின் விளைவே அண்மையில் ஜப்பானின் விசேட தூதுவர் யசூசி அகாஸி தென்னிலங்கைக்கு விஜயம் செய்தபோதும் கிளிநொச்சிக்கு விஜயம் செய்யாமல் திரும்பிச் சென்றமையாகும். அரசாங்கத்தின் விருப்பின் காரணமாகவே தாம் வன்னி செல்லவில்லை என்பதை யசூசிஅகாஸியும் ஊர்ஜிதம் செய்யத் தவறவில்லை.

சிறிலங்கா அரசின் தற்போதைய நிலைப்பாட்டின்படி சமாதான ஏற்பாட்டாளரான நோர்வேத்தரப்பினரும், யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழுவினரும் தவிர வெளிநாட்டு இராஜதந்திரிகளோ, பிரதிநிதிகளோ விடுதலைப்புலிகளைச் சென்று சந்திப்பதை அரசு விரும்பவில்லை. வெளிப்படையாகக் கூறுவதானால் அனுமதிக்க அரசு தயாராக இல்லை என்பதாகவே உள்ளது.

அத்தோடு நோர்வேப் பிரதிநிதிகள் கூட வடக்கிற்குச் சென்று திரும்புவதற்கான விசேட போக்குவரத்துச் செயற்பாடுகள் எதனையும் மேற்கொள்ளவும் அரசு தயாராக இல்லை. பொதுவான போக்குவரத்து மார்க்கத்தில் அவர்கள் சென்று திரும்பலாம் என்பது போன்ற நிலையே காணப்படுகின்றது. அண்மையில் கிளிநொச்சிக்கு வருகைதந்த நோர்வேத்தூதுவர் அவ்வாறே வந்து சென்றமை சுட்டிக்காட்டத்தக்கது.

அரசாங்கம் இந்நடவடிக்கைகளின் மூலம் விடுதலைப்புலிகளுக்கு வழங்கப்படும் சலுகைகள், அந்தஸ்து என்பன குறைக்கப்படுவதாகக் கருதுகின்றது. ஆனால் உண்மையில் அவ்வாறு எதுவும் இல்லை. மாறாக, சிறிலங்கா அரசாங்கம் தனது கோரமுகத்தைச் சர்வதேச சமூகம் கண்டுகொள்ளக்கூடாதென மறைக்க முற்படுவதுடன் சர்வதேச அரசுகளின் சமாதான முயற்சிகளுக்கு முட்டுக்கட்டைபோட விளைகின்றது என்பதையுமே வெளிப்படுத்துவதாகிறது.

அத்தோடு, அரசாங்கத்தின் விருப்பிற்குமாறான விளைவுகளும் ஏற்பட்டுவிடவுமிடமுண்டு. அதாவது சர்வதேச சமூகம் விடுதலைப் புலிகள் மீது அழுத்தங்களைப் பிரயோகிக்கவேண்டும் எனக் கோரும் அரசாங்கம் சர்வதேசச்சமூகத்திற்கு அதற்கான வாய்ப்பை வழங்காது தானாகவே தடைசெய்துவிடுவதாகி விடுகின்றது.


அடுத்ததாக இராணுவ அதிகாரிகள் மாவட்ட மட்டத்தில் விடுதலைப்புலிகளுடன் சந்திப்புக்களை மேற்கொள்ளக்கூடாது என விதித்துள்ள தடையானது இயல்புவாழ்க்கையை தோற்றுவிக்கக் கூடியதான நடவடிக்கைகளுக்கு முட்டுக்கட்டை போடுவது போன்றதாகும்.

போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவைப் பொறுத்து, மாவட்ட மட்டத்தில் இராணுவ அதிகாரிகளுக்கும், விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான சந்திப்புக்கள் முக்கியத்துவம் மிக்கவையாகவுள்ளன. இத்தகைய சந்திப்புக்கள், மோதல்கள், முரண்பாடுகளைத் தவிர்த்து இயல்புவாழ்க்கையைத்தோற்றுவிக்க உறுதுணையாக இருக்குமென கண்காணிப்புக்குழுவினர் கருதுகின்றனர். முன்னர் போன்று மாவட்ட மட்டத்தில் சந்திப்புக்கள் இடம் பெறாது போனால் நிலைமை மேலும் மோசமடையும் என்பது அவர்களது அபிப்பிராயமாகும்.

ஆனால் விடுதலைப்புலிகளுடனான இராணுவ அதிகாரிகள் சந்திப்பு ஒருபுறத்தில் புலிகளை அங்கீகரிப்பதாகவும், சமநிலை வைத்து நோக்குவதாகவும் ஆக்கிவிடுவதாக சிறிலங்கா ஆட்சியாளர்கள் கருதுவதாகத் தெரிகின்றது. சிலவேளைகளில் கடும்போக்காளரான புதிய இராணுவத்தளபதி லெப்.ஜெனரல் சரத் பொன்சேகாவின் சிபார்சின் அடிப்படையிலும் இந்நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கலாம்.

ஏனெனில் புதிய இராணுவத்தளபதியாகச் சரத்பொன்சேகா பதவி ஏற்றதும் இராணுவக் கட்டமைப்பில் செய்துவரும் மாற்றங்கள், அவர் சமாதான முயற்சிகளுக்கு முற்றுப்புள்ளிவைத்து யுத்தத்திற்கென இராணுவத்தைத் தயார்ப்படுத்தி வருவதையே வெளிக்காட்டுவதாய் உள்ளது.

ஆனால் வெளிநாட்டு இராஜதந்திரிகள் வருகைக்கான தடை, இராணுவ அதிகாரிகள் புலிகளுடன் பேச்சுவார்த்தைகள் நடத்தக்கூடாது என்ற நிலைப்பாடு சமாதான முயற்சிகளுக்குப் போடும் முட்டுக்கட்டையாகவே அமையக்கூடியதாகும். இத்தகைய தடைகள் எவையும் விடுதலைப்புலிகளுக்கு எத்தகைய பாதிப்புக்களையும் விளைவித்துவிட மாட்டாது. ஏனெனில் விடுதலைப்புலிகள் தமக்கான அங்கீகாரத்தையும், கௌரவத்தையும் தமது போராடும் வலிமை மூலமே பெற்றுக்கொண்டனர். இதற்குக் கடந்தகால வரலாறே எடு[illegible]ட்டாகும்.




# அமைச்சர் அதாவுல்லாவின் நயவஞ்சகம் புலிகளிடம் சரணடைந்தோரால் வெளிப்பட்டுள்ளது

### - பாராளுமன்றில் செல்வம் அடைக்கலநாதன்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளிடம் சரணடைந்த கருணாகுழு உறுப்பினர்கள் வெளியிட்டிருக்கும் தகவல்களினால் அமைச்சர் அதாவுல்லாவின் முகமூடி கிழிக்கப்பட்டு அவரின் நயவஞ்சகம் வெளிப்பட்டுள்ளது. இவ்வாறு தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

வரவு செலவுத்திட்டத்தின் மூன்றாம் நாள் விவாதத்தில் கலந்துகொண்டு உரை நிகழ்த்திய அவர் மேலும் தெரிவிக்கையில்;

தற்போது சமர்ப்பிக்கப்பட்டுள்ள வரவு செலவுத் திட்டத்தினை ஏழைகளின் வரவு செலவுத்திட்டம் என்று கூறிக்கொண்டாலும், இராணுவத் தளபாடக்கொள்வனவுக்காக கோடிக்கணக்கான நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

எனவே, இந்த வரவு செலவுத் திட்டம் எந்தளவுக்கு வடக்கு கிழக்கு பகுதிகளில் நடைமுறைப்படுத்தப்படப் போகின்றது என்பது மிகவும் சந்தேகமே. சர்வதேச உதவிகள் இதற்காகத் தேவைப்படுகின்றன. இதற்கு உடனடியாகப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட வேண்டும்.

அதாவுல்லாவின் முகத்திரை இன்று கிழிக்கப்பட்டுள்ளது. பள்ளிவாசலில் குண்டு வீசியது விடுதலைப் புலிகள் தான் என்று இங்கு சிலர் எந்தவித எண்ணமும் இல்லாமல் உடனடியாகக் குற்றம் சுமத்தியபோதே எமக்குப் பலத்த சந்தேகம் ஏற்பட்டு விட்டது. இப்போது அவரின் நயவஞ்சக அரசியலும், தன் அரசியலுக்காக தன் மதத்தையும், இனத்தையும் கொச்சைப்படுத்தும் நயவஞ்சகமும் தற்போது தெரிந்து விட்டது.

இப்போது அவர் என்ன சொல்லப் போகின்றார்?

தமிழ் தேசியக் கூட்டமைப்பைப் பற்றிப் பேச எந்த அருகதையும் இல்லாத அவர், கூட்டமைப்பினர் விடுதலைப் புலிகளின் அடிவருடிகள் என அச்சமின்றி குற்றம் சாட்டிய அவரைப் போல நாம் ஒன்றும் பின் கதவால் வந்து அரசியல் செய்யவில்லை.

இன்று உண்மை வெளியாகியுள்ளது. இதன் பின்னரும் தொடர்ந்தும் இவர் அமைச்சராக இருக்கப் போகின்றாரா? என செல்வம் அடைக்கலநாதன் கேள்வி எழுப்பியுள்ளார்.

# வரவு-செலவுத் திட்டத்தின் மூலம் அரசு மக்களை ஏமாற்றிவிட்டது

### - ஐ.தே.க. பா.உறுப்பினர் காமினி லொக்குகே

(கொழும்பு)

அரசாங்கம் சமர்ப்பித்த வரவு செலவுத் திட்டத்தில் தனியார் துறையைச் சேர்ந்த ஊழியர்களுக்கு வேதனம் அதிகரிக்கப்படவில்லை என ஐக் கிய தேசியக் கட்சி குற்றம் சுமத்தியுள்ளது.

அரசாங்க ஊழியர்களுக்கு ஆயிரம் ரூபா வேதன அதிகரிப்பை வழங்கி மக்களை ஏமாற்றியுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் காமினி லொக்குகே தெரிவித்தார்.

பண்டிகைக்காலத்தில் செலவுக்கேற்ற வகையில் வருமான வசதி இல்லாததால் மக்கள் அசௌகரிய நிலையை எதிர்நோக்கியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் உரையாற்றிய காமினி லொக்குகே இதற்கான முழுமையான பொறுப்பை அரசாங்கமே ஏற்கவேண்டும் எனவும் தெரிவித்தார். (32)

# புதிய லிபரல் பொருளாதார முறையினால் நாட்டின் அபிவிருத்தியில் முரண்பாடு

### - பாராளுமன்றில் பிரதிச் சபாநாயகர் கருத்து

(கொழும்பு)

புதிய லிபரல் பொருளாதார முறையினால் நாட்டின் அபிவிருத்தியில் முரண்பாடுகள் எழுந்துள்ளதாக பிரதி சபாநாயகர் கீத்தாஞ்ஜன குணவர்தன தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற வரவு செலவுத் திட்டம் தொடர்பான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

கைத்தொழில் அபிவிருத்தி சபையின் பாரியளவு நிதி கடந்த காலங்களில் வீண் விரயமாக்கப்பட்டுள்ளதாக விவாதத்தில் கலந்து கொண்ட கிராமிய கைத்தொழில் மற்றும் சுயதொழில் ஊக்குவிப்பு அமைச்சர் எஸ்.பி.நாவின்ன தெரிவித்தார்.

விவாதத்தில் கலந்துகொண்ட ஐக்கிய தேசிய கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்தன 1994 ஆம் ஆண்டு முதல் 2004 ஆம் ஆண்டு வரை வரவு செலவுத் திட்ட யோசனைகளில் முன்வைக்கப்பட்ட யோசனைகளில் பல செயற்படுத்தப்படவில்லை எனத் தெரிவித்தார்.

இந்த முறை சமர்ப்பிக்கப்பட்ட வரவு செலவுத் திட்டத்தில வருமானம் பெறும் நடவடிக்கைகள் பற்றி கூறப்படாவிட்டாலும் செலவிடும் முறை குறித்து தெரிவிக்கபட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

இந்த விவாதத்தில் கலந்து கொண்ட ஜாதிக ஹெல உறுமய கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் எல்லாவல மேதானந்த தேரர் விவசாயம் மேற்கொள்ளப்படாத வயல் நிலங்களை அரசாங்கம் சுவீகரிக்க வேண்டும் எனத் தெரிவித்தார்.

தென்னை மரங்கள் வெட்டப்படுவதையும் தென்னங்காணிகள் துண்டாக்கப்பட்டு விற்பனை செய்யப்படுவதை தடைசெய்ய வேண்டும் எனவும் அவர் கேட்டு கொண்டார். (32)

# நேர்த்தியான திட்டமிடல்களின் அடிப்படையில் எதிர்காலத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட வேண்டும்

### -திணைக்கள தலைவர்களுடனான சந்திப்பில் கரிகாலன்



நேர்த்தியான திட்டமிடல்களின் அடிப்படையில் அடுத்த ஆண்டிற்கான திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு செயற்படுத்தப்பட வேண்டும் என தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் சி.கரிகாலன் தெரிவித்தார்.

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் 2006ஆம் ஆண்டுக்கான துறைசார் வேலைத்திட்ட முன்னெடுப்புத்தொடர்பாக கிளிநொச்சி மாவட்டத்திற்கு உட்பட்ட திணைக்களத்தலைவர்களுடனான ஆலோசனைக் கருத்தரங்கு நேற்றுக் காலை 10.00 மணியளவில் த.பொ.மே நிறுவன நடுவப் பணியக கேட்போர் கூடத்தில் நிறுவனப் பொறுப்பாளர் சி. கரிகாலன் தலைமையில் ஆரம்பமானது.

இதில் த.பொ.மே.நிறுவன கிளிநொச்சி மாவட்டப் பொறுப்பாளர் மு.செந்தில் மற்றும் மாவட்ட இணைப்பாளர், பிரதேச இணைப்பாளர்கள், உட்கட்டுமான திட்ட இணைப்பாளர், மற்றும் விவசாயத் திணைக்களம், கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம், கமத்தொழில் திணைக்களம், நீர்ப்பாசனத் திணைக்களம், விவசாய ஆராய்ச்சி நிலையம், உதவி விவசாயத் திணைக்கள விதை உற்பத்தி நிறுவனம், பனை அபிவிருத்திச் சபை, மாவட்ட கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச்சங்கம் ஆகியவற்றின் பணிப்பாளர்கள், துறைசார் அலுவலர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.



மேற்படி நிகழ்வில் நிறுவனப் பொறுப்பாளர் சி.கரிகாலன் கருத்துத் தெரிவிக்கையில்; 2006ஆம் ஆண்டு திணைக்களங்களால் முன்மொழியப்படும் முன்னுரிமைப்படுத்தப்பட்ட திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும் என்றும் திணைக்கள அரசசார்பற்ற நிறுவன, உதவி நிறுவன நிதிகளை ஒருங்கிணைத்து குறித்த திட்டங்களை நிறைவேற்ற வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

திட்டங்கள் அவசர வேலைகளுக்கானவை முன்னுரிமைப்படுத்தப்பட்டும் நடுத்தர நீண்டகாலத்திட்டங்கள், தயாரிக்கப்பட வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார். அத்தோடு திணைக்களங்கள், நிறுவனம் சார்ந்த வேலைத்திட்டங்களை முன்னெடுக்கும்போது சரியான திட்டங்களை முன்வைக்க வேண்டும் என்றும் இதற்கான மதிப்பீடுகளை சரியான முறையில் திட்டமிட்டு இதற்கு பூரண ஒத்துழைப்புக்களை துறைசார்ந்த திணைக்களங்கள் வழங்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார். (46)

# எதிர்கால செயற்பாடுகள் குறித்து மகிந்த-ஜே.வி.பி யுடன் பேச்சு

### -ரணிலுடன் இன்று சந்திப்பு

(கொழும்பு)

சிறிலங்கா சனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தனது எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பாக நேற்று ஜே.வி.பியுடன் கலந்துரையாடல் ஒன்றை நடாத்தியுள்ளார்.

அலரி மாளிகையில் நேற்று நடைபெற்ற இந்தச் சந்திப்பில் ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க, ரில்வின் சில்வா, விமல் வீரவன்ச, அநுரகுமார திஸாநாயக்க ஆகியோர் கலந்து கொண்டனர்.இதே வேளை சனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவிற்கும் இடையில் இன்று சந்திப்பு ஒன்று இடம் பெறவுள்ளது.

இது குறித்து கருத்து வெளியிட்டுள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதிப் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க சனாதிபதியின் அழைப்பின் பேரில் இந்தச் சந்திப்பு நடைபெறவுள்ளது. இந்தச் சந்திப்பில் விடுதலைப் புலிகளுடன் அரசாங்கம் நடாத்த திட்டமிட்டுவரும் பேச்சுவார்த்தை தொடர்பாக கலந்துரையாடவே சனாதிபதி எதிர்க்கட்சித் தலைவருக்கு அழைப்பு விடுத்துள்ளார். இன்று மாலை 4.00 மணிக்கு அலரிமாளிகையில் இந்தச் சந்திப்பு இடம்பெறவுள்ளது என்றார். (32)

# ரூ.350 இற்கு உரம் தர மறுத்த அரச அதிகாரி மீது தாக்குதல்!

### - ஆனமடுவவில் சம்பவம்

(கொழும்பு)

சனாதிபதி மகிந்த ராஜபக்ஷ 350 ரூபாவிற்கு உரம் வழங்குவதாக தேர்தலின் போது வழங்கிய உறுதிமொழிக்கமைவாக உரத்தை வழங்க மறுத்த அரச அதிகாரி ஒருவர் ஆனமடுவ பிரதேசத்தைச் சேர்ந்த விவசாயினால் கடுமையாகத் தாக்கப்பட்டுள்ளார். குறித்த விவசாயி விவசாயத் திணைக்களத்திற்குச் சென்று, 350 ரூபாவிற்கு உரம் தரும்படி அதிகாரியிடம் கேட்டுள்ளார். 350 ரூபாவிற்கு உரம் விற்பனை செய்யமுடியாது என அந்த அதிகாரி கூறியுள்ளார். ஆத்திரமடைந்த அந்த விவசாயி அதிகாரியைப் பலமாகத் தாக்கியதால் தற்பொழுது அந்த அதிகாரி ஆனமடுவ வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார். அதிகாரியைத் தாக்கிய விவசாயி தற்பொழுது கைது செய்யப்பட்டுள்ளார்.

# லெப். கேணல் விக்டர் பயிற்சிப் பாசறையின் 7ஆவது துணைப்படை அணியின் பயிற்சி நிறைவு

(மன்னார்)

லெப்டினன் கேணல் விக்டர் பயிற்சிப்பாசறையின் ஏழாவது துணைப்படை அணி நேற்றுப் பயிற்சிகளை முடித்து வெளியேறியது. இவ்வணியினர் சிறிலங்கா இராணுவ காட்டுப்பாட்டுப் பகுதியான முருங்கன் பிரதேசத்தில் இருந்து வருகை தந்திருந்தனர். இவ்வணியில் 150 பேர் தங்களது பயிற்சிகளை நிறைவு செய்துள்ளனர்.

இந் நிறைவு நிகழ்வானது பிற்பகல் 4.00 மணியளவில் நடைபெற்றது. மன்னார் மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் இனியவன் மற்றும் மன்னார் மாவட்ட விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் ஜான், தலைமைச் செயலக மட்டக்களப்பு மாவட்டப் பொறுப்பாளர் சுரேஸ் ஆகியோர் கலந்து கொ[illegible] கருத்துரைகளை வழங்கினர்.

# பொலிசாருடன் பணியாற்றியவர் பாலையூற்றில் சுட்டுக்கொலை!

(திருமலை)

திருகோணமலை மாவட்டம், பாலையூற்றில் நேற்றுப்பிற்பகல் 2.15 மணியளவில் ஒருவர் இனந்தெரியாத நபர்களினால் சுட்டுக் கொல்லப் பட்டுள்ளார். அன்ரன் சுரேஸ் (வயது-32) என்ற நபரே சுட்டுக்கொல்லப்பட்டதாக அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இரண்டு பிள்ளைகளின் தந்தையான இவர் நேற்று மதிய உணவுக்காக வீடுநோக்கி வரும்போதே சுட்டுக்கொல்லப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இவர் 1987 ஆம் ஆண்டு இந்திய இராணுவத்தினரிஹன் காலப்பகுதியில் மக்கள் தொண்டர் படை அணியில் உறுப்பினராக இருந்தவர் எனவும், தற்போது சிறிலங்காப் பொலிசில் மரவேலைகள் செய்துவருபவராக இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

## அம்பாறையில்..

15 நிமிடங்கள் இருக்கும் போதே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதாக படைத்தரப்பு தெரிவித்துள்ளது.

தாக்குதலை அடுத்து உலங்குவானூர்தி குமன வான்படைத் தளத்தில் தரையிறக்கப்பட்டதாக வான்படையின் பேச்சாளர் கப்டன் அஜந்த டி சில்வா தெரிவித்தார் .(32)

## புலிகளைச்..

இதனைத் தடுக்கும் வகையில் தமிழ்த் தரப்பினர் அனைவரும் ஒன்றிணைந்து செயற்படுவது தொடர்பிலும் தற்போது ஆராயப்பட்டு வருகின்றது.

இவ்விடயம் குறித்து இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பிரதிநிதிகள் தமிழ் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## பயணத்தில்...

பிரதிநிதி யசூசி அகாஸி தெரிவித்திருந்தார்.

இந்த நிலையிலேயே இன்னும் நோர்வேஜிய உயர் குழுவினரின் பயணத்திகதி முடிவாக்கப்படவில்லை என நோர்வேயின் இலங்கைத் தூதரகம் தெரிவித்துள்ளது. (32)

## நோர்வே-சிறி..

இந்தச் சந்திப்பில் அமைச்சின் செயலாளர் பளியக்கார, சமாதான செயலகத்தின் பணிப்பாளர் கலாநிதி ஜோன் குணரட்ண, கொள்கைப் பிரிவின் செயலாளர் சங்கா ஜெயசேகர ஆகியோரும் பங்கு கொள்ளவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதன் போது இலங்கையின் சமாதான முன்னெடுப்புகள் பற்றிக் கலந்துரையாடவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (32)

## சிறிலங்காவுக்கு..

மக்கள் தொடர்ச்சியாக ஜனநாயக வழி போராட்டங்களை மேற்கொள்கின்ற இந் நிலையிலும், நீங்கள் எடுத்த இந்த முடிவு தமிழ் மக்கள் மீதான சிறிலங்கா அரசாங்கத்தினது ஆக்கிரமிப்புக்குக் கொடுக்கின்ற நற்

சான்றிதழாகவும், ஆக்கிரமிப்புக்கு அனுசரணை புரிவதாகவும் அமைகின்றது.

எனவே தங்களிடம் நாம் தாழ்மையுடன் வேண்டிக்கொள்வது யாதெனில் எமது பூர்வீக வாழ்விடம் எமக்கு வேண்டும் என்ற அடிப்படையில் நீங்கள் இந்த விமான நிலைய விஸ்தரிப்புக்கான உதவி புரிதலை மீள் பரிசீலனை செய்யுமாறு தமிழ் மக்கள் சார்பாகக் கேட்டுக்கொள்கின்றோம்.

## சந்திரிகாவின்..

இந்த நியமனம் தொடர்பான வாத்தமானி அறிவித்தலை வெளியிடுமாறும் சுசில் பிரேமஜயந்த தேர்தல் ஆணையாளரைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

இதேவேளை முன்னாள் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மேல் மாகாண முதலமைச்சர் ரெஜினோல்ட் கூரேயை அல்லது முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சந்தண கத்தியாராட்சியை நியமிக்குமாறு வலியுறுத்தியபோதும் அவர் சிங்கப்பூர் பயணமாகிய பின் இந்த நியமனத்தை மேற்கொள்ளுமாறு தேர்தல் ஆணையாளரிடம் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு கேட்டுக் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (32)

## இராணுவ..

தொடர்ந்தும் இராணுவமானது எமது மக்களை அச்சுறுத்தும் வகையில் மக்கள் மீது தாக்குதல்களை நடத்துவதிலும், அச்சுறுத்துவதிலும் சுற்றிவளைப்புக்கள் மூலம் தேடுதல் நடாத்தி எமது மக்களை கைது செய்யும் நடவடிக்கைகளையும் தீவிரப்படுத்தியுள்ளது.

அண்மைக்காலப் பகுதிகளில் இராணுவத்தினர் மீது மேற்கொள்ளப்பட்ட குண்டுத்தாக்குதல்களை நாமே மேற்கொண்டோம். கடந்த சில நாட்களா[illegible] எமது தாக்குதல்களை இடைநிறு[illegible]தியிருந்தோம். ஆனால் எம் மக்கள் மீது இராணுவம் தனது அராஜகங்களை தொடர்ந்தும் கட்டவிழ்த்து விட்டுள்ளது. இதனை சிறிலங்கா இராணுவம் உடனடியாக நிறுத்தவேண்டும். இதுவரை கைது செய்யப்பட்ட இளைஞர்கள் உடனடியாக விடுதலை செய்யப்பட வேண்டும். இல்லையேல் ஆயுதப் பயிற்சி பெற்ற ஆயிரக்கணக்கான எமது படை வீரர்கள் தயார் நிலையில் உள்ளனர். குடாநாட்டில் 250-இற்கும் மேற்பட்ட எமது வீரர்கள் இராணுவத்தினருக்கு எதிரான தாக்குதல்களை நடாத்த தயாராக உள்ளனர். இராணுவத்தினர் தமது சுற்றிவளைப்புகள், கைதுகள் என்பவற்றை உடன் நிறுத்த வேண்டும். இல்லையேல் குண்டுச் சத்தங்கள் கேட்டவண்ணமே இருக்கும். எமது ஆதரவாளர் ஒருவர் கொல்லப்படின் இராணுவத்தினர் பலர் கொல்லப்படுவர். போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினராகிய நீங்கள் இராணுவ அராஜகங்களை நிறுத்துவதை உறுதிப்படுத்துவீர்களானால் நாம் எமது தாக்குதல்களை நிறுத்தி தங்களின் அலுவலகத்திற்கு முன்னால் வரத் தயாராக உள்ளோம். இல்லையேல் இனிவரும் நாட்களில் இராணுவத்தினர் மீது கடும் தாக்குதல்கள் தொடரும். இதை யாராலும் தடுத்து நிறுத்த முடியாது என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (28)

## மக்களின்..

மெட்ஸ் லூஷன் ஆகியோரும் விடுதலைப்புலிகள் சார்பில் மன்னார் மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் இனியவன், மாவட்ட மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் வேங்கை, மற்றும் மன்னார் மாவட்ட சமாதானச் செயலக இணைப்பாளர் சோசை ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதன்போது மன்னார் மாவட்டத்தில் அண்மைக்காலமாக மக்கள் சந்திக்கும் பிரச்சினைகள் வழமைக்கு மாறாக இராணுவத்தினரின் சுற்றிவளைப்பு, தேவையற்ற தேடுதல்கள் என்பனவற்றால் மக்களுடைய இயல்பு வாழ்க்கையை பாதிப்படையச் செய்துள்ளமை மற்றும் அரசபடைகளால் ஏற்படுகின்ற அச்சுறுத்தல்கள், போர் நிறுத்த மீறல்கள் தொடர்பாக முக்கியமாகக் கலந்துரையாடப்பட்டுள்ளளது.

இதேவேளை இச்சந்திப்பின் போது கண்காணிப்புக்குழுவின் தலைவர் கூறுகையில்; தற்போது மன்னார் மாவட்டத்தில் போர்நிறுத்த ஒப்பந்தத்திற்கு மாறாகச் செய்யப்படுகின்ற நிலைமை தொடர்பாகவும், சமாதான முயற்சிக்கு தாங்கள் தொடர்ந்தும் நடுவராக இருந்து செயற்படுவதாகவும் கூறியுள்ளார். அத்துடன் பொது மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்ருப்பதாகவும், அண் மைக் காலமாக மன்னாரில் மக்களால் பெருமளவு சம்பவங்கள் தங்களுக்குச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளதாகவும், இந் நிலைப்பாடு தொடருவதால் மக்கள் மத்தியில் யுத்தப் பீதியை ஏற்படுத்தி வருவதாகவும் கூறியுள்ளார்.

## இரு..

அனைத்து வாகனங்களையும், தடுத்து நிறுத்தி சோதனையிட்டு ஓட்டுனர்களையும், பயணிகளையும் கடும் விசாரணைகளுக்குட்படுத்தினர். இந்த நடவடிக்கையின் போது கைது செய்யப்பட்ட இரு தமிழ் இளைஞர்களும் மன்னார் சிறிலங்கா பொலிஸ் நிலையத்தில் விசாரணைக்காகத் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

பேசாலையில் திங்கட்கிழமை இரவு நடத்தப்பட்ட கைக்குண்டுத் தாக்குதலில் 25 சிறிலங்காப் பொலிசார் காயமடைந்ததை[illegible] இந்த நடவடிக்கை மே[illegible]ள்ளப்பட்டதாக இராணு[illegible]புச் செய்திகள் தெரிவிக்கி[illegible]

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 15 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.